# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டம்*

---

*(2014 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 16 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2014, ஒற்றோபர் மாதம் 17 ஆம் திகதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 86.00** **தபாற் செலவு : ரூபா 70.00**

*2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டம்*

*ச. வ. ஓ. 59/2005*

*[2014 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 16 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]*

***இலங்கையில் நிர்மாணத் தொழிலின் அபிவிருத்திக்கு ஏற்பாடு செய்வதற்கும் ; நிர்மாணத் தொழிலின் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்கும், பதிவுசெய்வதற்கும் ; விதிமுறைப் படுத்துவதற்கும் மற்றும் தரப்படுத்துவதற்கும் ; நிர்மாணம் மீதான தேசிய மதியுரைப் பேரவையைத் தாபிப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்கும் ; நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையைத் தாபிப்பதற்கும் ; நிர்மாணத் தொழில் அபிவிருத்தி நிதியம் மற்றும் நிர்மாணத் தொழில் அபி விருத்தி அதிகாரசபையின் நிதியத்தைத் தாபிப்பதற்கும் ; தொழிலுடன் தொடர்புபட்ட உயர்தொழிலர்கள், உற்பத்தி யாளர்கள், வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் கைவினைஞர்கள் என்போரினது முன்னேற்றத்துக்காகவும் நல்வாழ்வுக்காகவும் வழிமுறைகளை ஏற்பாடுசெய்வதற் கும் ; நிர்மாணச் செயற்பாடுகளுடன் தொடர்புபட்ட பிணக்குகளைத் தீர்த்துவைப்பதற்கும் ; இலங்கையின் நிர்மாணத் தொழிலில் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் ; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளை வான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.***

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாக :-

*சுருக்கப் பெயர், நடைமுறைக்கு வரும் தேதி மற்றும் ஏற்புடைமை.*

***1.*** (1) இச்சட்டம், 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலா மென்பதுடன், வர்த்தமானியில், வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான (இதனகத்துப் பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(2) இச்சட்டமானது, இதனகத்து வேறுவகையாக ஏற்பாடுசெய் யப்பட்டவாறு தவிர, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினுள் நிர்மாணத் தொழில் தொடர்பிலான எல்லாச் செயற்பாடுகளுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் I

### நிர்மாணம் மீதான தேசிய கொள்கையும் அதனை நடைமுறைப்படுத்துதலும்.

நிர்மாணம் மீதான தேசியக் கொள்கை.

**2.** (1) இச்சட்டத்தின் II ஆம் பாகத்தின்கீழ் தாபிக்கப்பட்ட நிர்மாணம் மீதான தேசிய மதியுரைப் பேரவையானது, நிர்மாணம் மீதான தேசியக் கொள்கையொன்றை வகுத்தமைத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கொள்கையானது நிர்மாணத்தொழில் மற்றும் அதன் இலக்குகளுடன் தொடர்புடைய கருமங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். நிர்மாணம் மீதான தேசிய மதியுரைப் பேரவையானது தேசியக் கொள்கையின் பூர்த்தியின் மீது அங்கீகாரத்துக்கென அமைச்சரவைக்கு சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய தேசியக் கொள்கையானது, நிர்மாணத் தொழிலின் அபிவிருத்திகளுடன் இசைவாக பற்றி காலத்துக்குக்காலம் மீளாய்வு செய்யப்படலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் நியதிகளின்படி தேசியக் கொள்கையை வகுத்தமைப்பதில், பாரம்பரிய அறிவுத்துறையிலுள்ள வளவாய்ப்பு ஆளணியினருட்பட, நிர்மாணத் தொழிலினுள் உள்ள உயர்தொழிலர்களைச் சம்பந்தப்படுத்துவதற்கு அழுத்தம் கொடுக்கப்படுதல் வேண்டும்.

தேசியக் கொள்கையை நடைமுறைப் படுத்துதல்.

**3.** அமைச்சரானவர், 2 ஆம் பிரிவின் நியதிகளின்படி தயாரிக்கப்பட்ட நிர்மாணம் மீதான தேசியக்கொள்கையை நடைமுறைப்படுத்தும் நோக்கத்துக்காக, காலத்துக்குக்காலம், தேசியக் கொள்கையை ஊக்குவிக்கவும் நடைமுறைப்படுத்துதலை ஏற்பாடுசெய்வதற்கும் நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபைக்கு அவசியமானவையெனக் கருதக்கூடியவாறான அத்தகைய பொது அல்லது விசேட பணிப்புக்களை வழங்கலாம்.

## பாகம் II

### நிர்மாணம் மீதான தேசிய மதியுரைப் பேரவை

நிர்மாணம் மீதான தேசிய மதியுரைப் பேரவையைத் தாபித்தல்.

**4.** (இதனகத்துப்பின்னர் ‘‘பேரவை’’ எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிர்மாணம் மீதான தேசிய மதியுரைப் பேரவை என அழைக்கப்படவேண்டிய பேரவையொன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் 5 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறான உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**5.** (1) பேரவை பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:- பேரவையின் அமைப்பு.

(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள், அதாவது -

(i) நிர்மாணம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர், அவர் பேரவையின் தவிசாளராகவிருத்தல் வேண்டுமென்பதுடன், அவர் சமுகந்தராத விடத்து, அச் செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அவ்வமைச்சின் மேலதிகச் செயலாளரொருவரின் பதவி வரிசைக்குக் குறையாத அலுவலரொருவர் ;

(ii) நகர அபிவிருத்தி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அச்செயலாளரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அவ்வமைச்சின் அபிவிருத்தி வேலைக்குப் பொறுப்பான சிரேட்ட உதவிச் செயலாளர் என்னும் பதவிவரிசைக்குக் குறையாதவருமான அலுவலரொருவர் ;

(iii) பெருந்தெருக்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அச்செயலாளரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அவ்வமைச்சின் அபிவிருத்தி வேலைக்குப் பொறுப்பானவரும், சிரேட்ட உதவிச் செயலாளர் என்னும் பதவி வரிசைக்குக் குறையாதவருமான அலுவலரொருவர் ;

(iv) நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அச்செயலாளரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அவ்வமைச்சின் அபிவிருத்தி வேலைக்குப் பொறுப்பானவரும், சிரேட்ட உதவிச் செயலாளர் என்னும் பதவிவரிசைக்குக் குறையாதவருமான அலுவலரொருவர் ;

(v) நீர்ப்பாசனம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அச்செயலாளரால் பெயர்குறித்து நிய

மிக்கப்பட்ட அவ்வமைச்சின் அபிவிருத்தி வேலைக்குப் பொறுப்பானவரும், சிரேட்ட உதவிச் செயலாளர் என்னும் பதவிவரிசைக்குக் குறையாத வருமான அலுவலரொருவர் ;

(vi) வீடமைப்பு என்னும் விடயத்திற்குப் பொறுப் பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அச்செயலாளரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அபிவிருத்தி வேலைக்குப் பொறுப்பானவரும், சிரேட்ட உதவிச் செய லாளர் என்னும் பதவி வரிசைக்குக் குறையாத வருமான அலுவலரொருவர் ;

(vii) வாழ்க்கைத்தொழில்சார் மற்றும் தொழில் நுட்பப் பயிற்சி என்னும் விடயத்திற்குப் பொறுப் பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அச்செயலாளரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அபிவிருத்தி வேலைக்குப் பொறுப்பானவரும் சிரேட்ட உதவிச் செயலா ளர் என்னும் பதவி வரிசைக்குக் குறையாத வருமான அலுவலரொருவர் ; அத்துடன்

(ஆ) (இதனகத்துப்பின்னர் “நியமிக்கப்பட்ட உறுப்பினர் கள்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அமைச்சரால் நியமிக்கப்பட்ட பின்வரும் பதினைந்து உறுப் பினர்கள் :-

(i) இச்சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப் பட்ட நிர்மாணத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் தவிசாளர் ;

(ii) 1968 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கைப் பொறியியலாளர் நிறுவகச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைப் பொறியியலாளர் நிறுவகத்தின் தலைவர் அல்லது அவரது பிரதிநிதி ;

(iii) 1976 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கைக் கட்டிடக் கலைஞர்கள் நிறுவகச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைக் கட்டிடக் கலைஞர் கள் நிறுவகத்தின் தலைவர் அல்லது அவரது பிரதிநிதி ;

(iv) 2007 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கைக் கணிய அளவையாளர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைக் கணிய அளவையாளர் நிறுவகத்தின் தலைவர் அல்லது அவரது பிரதிநிதி ;

(v) 1986 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, இலங்கை நகர்த் திட்டமிடுவோர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை நகரத் திட்டமிடுவோர் நிறுவகத்தின் தலைவர் அல்லது அவரது பிரதிநிதி ;

(vi) 2003 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, இலங்கை உசாத்துணைப் பொறியியலாளர் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை உசாத்துணைப் பொறியியலாளர் கழகத்தின் தலைவர் அல்லது அவரது பிரதிநிதி ;

(vii) 1992 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க, இலங்கை கூட்டுப்பட்டய எந்திரவியலர் நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை கூட்டுப்பட்டய எந்திரவியலர் நிறுவனத்தின் தலைவர் அல்லது அவரது பிரதிநிதி ;

(viii) முறையே பாரிய மற்றும் சிறிய ஒப்பந்தக்காரர்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற, இலங்கைத் தேசிய நிர்மாணக் கழகத்தினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட இலங்கைத் தேசிய நிர்மாணக் கழகத்திலிருந்தான பிரதிநிதிகள் இருவர் ;

(ix) இலங்கை நிர்மாணத் தொழிலின் சம்மேளனத்தினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட இலங்கை நிர்மாணத் தொழிலின் சம்மேளனத்திலிருந்தான பிரதிநிதியொருவர் ;

(x) 1968 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கைப் பொறியியலாளர் நிறுவகச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட பொறியியலாளர் நிறுவகத்தினால், பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர்; அத்துடன்

(xi) நிர்மாணம், சூழற்சார் அறிவியல், தொழில் உறவுகள் மற்றும் பொதுச் சுகாதாரம் அல்லது தான்புரிதொழில்சார் சுகாதாரம் ஆகிய துறைகளில் பிரபல்யம் எய்தியுள்ள ஆட்களிடையேயிருந்து அமைச்சரால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் நால்வர்.

(2) ஆளொருவர் -

(அ) அவர், பாராளுமன்றத்தின் அல்லது ஏதேனும் மாகாண சபையின் அல்லது ஏதேனும் உள்ளூரதிகார சபையின் உறுப்பினர் ஒருவராகவிருந்தால் அல்லது வந்தால் ; அல்லது

(ஆ) அவர், இலங்கைப் பிரசையொருவராக இல்லாதிருந்தால் அல்லது இல்லாதொழிந்தால் ; அல்லது

(இ) அவர், இலங்கையில் அல்லது வேறேதேனும் ஒரு நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீனமின்மையினால் பீடிக்கப்பட்டவராகக் காணப்பட்டால் அல்லது வெளிப்படுத்தப்பட்டால் ; அல்லது

(ஈ) அவர், இலங்கையிலுள்ள அல்லது வேறேதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட மறியற்றண்டனைத் தீர்ப்பை அனுபவித்துக்கொண்டிருந்தால் அல்லது அனுபவித்தவராக இருந்தால் ; அல்லது

(உ) அவர், நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகார சபையினால் அல்லது அதன்சார்பில் செய்யப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தின்கீழ் ஏதேனும் உரிமையை அல்லது நன்மையைக் கொண்டிருந்தால் அல்லது துய்த்தால் ; அல்லது

(ஊ) அவர் பேரவையின் உறுப்பினரொருவராகத் தமது பணிகளை நிறைவேற்றுவதனைப் பங்கமான முறையில் பாதித்திருக்கக்கூடியவாறான ஏதேனும் நிதிசார் அல்லது வேறு அக்கறையைக் கொண்டிருந்தால்,

பேரவையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்திருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்.

(3) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும், இறப்பின் மூலம், பதவியிலிருந்து நீங்குவதன்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மூலம் அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டுக் காலப்பகுதியொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன், அவர் பதவியிலிருந்து அகற்றப்பட்டிருந்தாலொழிய, மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(4) அமைச்சர் அவ்வாறு செய்வது உசிதமானதெனக் கருதினால் அதற்கான காரணங்களைக் குறித்துக்காட்டிய பின்னர் எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

(5) எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர், எந்நேரத்திலும், அமைச்சருக்கு முகவரியிடப்பட்டதும், பதிவஞ்சல்மூலம் அனுப்பப்பட்டதும், அப்பொருள்பட்டதுமான கடிதமொன்றின்மூலம் பதவியிலிருந்து நீங்கலாம்.

(6) எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர், இறப்பின்மூலம், பதவியிலிருந்து நீங்குவதன்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மூலம் பதவியை வறிதாக்கும்பட்சத்தில்,

அமைச்சரானவர், (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்டவாறான இயைபான உயர்தொழிற்சார் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவாறு அத்தகைய உறுப்பினரை அடுத்துறுவதற்கு வேறெவரேனுமாளை நியமிக்கலாம். அவ்வாறு நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர், அவர் எந்த உறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரின் முடிவுறாதெஞ்சியுள்ள பதவிக்காலத்துக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(7) நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், மூன்று மாதங்களுக்குக் குறையாதவொரு காலப்பகுதிக்குச் சுகவீனம் காரணமாக, உடற்றகுதியீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாகத் தமது கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவிருப்பின், அத்தகைய இயலாமை பற்றி எழுத்தில் அமைச்சருக்கு அறிவிப்பது அத்தகைய தகவலைப் பெற்றுக் கொண்டதன்மேல் அவரின் இடத்தில் செயலாற்றுவதற்கென, (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்டவாறான இயைபான உயர்தொழிற்சார் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட வேறோராளை நியமிக்கலாம்.

(8) பேரவையின் செயல் அல்லது நடவடிக்கையெதுவும் பேரவையில் ஏதேனும் வெற்றிடம் இருக்கின்ற காரணத்தினால் மட்டும் அல்லது பேரவையின் உறுப்பினரொருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருக்கின்ற காரணத்தினால் மட்டும் செல்லுபடியற்றதாதலாகாது.

(9) பேரவையின் ஏதேனும் கூட்டத்தில் எல்லா முடிபுகளும் சமுகமாகவுள்ள உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்கொன்றினால் முடிபுசெய்யப்படுதல் வேண்டும். வாக்குகள் சமமாகவுள்ள விடயத்தில், தலைமைவகிக்கும் உறுப்பினர் அறுதியிடும் வாக்கொன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(10) பேரவையின் உறுப்பினர்களுக்கு, நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதத்திலும் ஊதியமளிக்கப்படுதல் வேண்டும்.

**6**. பேரவையின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் :- பேரவையின் குறிக்கோள்கள்.

(அ) நிர்மாணத் தொழிலின்மீதான தேசியக் கொள்கையையும் அதன் நடைமுறைப்படுத்தல் பொறிமுறையை வகுத்தமைத்தல் மற்றும் திருத்துதல் ;

(ஆ) நிர்மாணத் தொழிலின் அபிவிருத்திக்கான ஏதேனும் தேவையின்மீது அமைச்சருக்கு கூற்றுக்களைச் செய்தல்;

(இ) இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படவேண்டிய ஏதேனும் ஒழுங்குவிதி மீது அமைச்சருக்கு மதியுரை வழங்குதலும் விதப்புரைகளைச் செய்தலும் ;

(ஈ) நிர்மாணத் தொழிலைப் பாதிக்கக்கூடியவாறான அல்லது அதன் இடைநேர்விளைவான அல்லது அதனோடு தொடர்புபட்ட மூலோபாயப் பிரச்சினைகள், கொள்கைகள் மற்றும் சட்டவாக்க முன்மொழிவுகள்மீது அதிகாரசபைக்கு மதியுரையளித்தல் மற்றும் விதப்புரைகளைச் செய்தல் ; அத்துடன்

(உ) நிர்மாணத் தொழிலின் அபிவிருத்தி மற்றும் நிலைபேறான தன்மைக்கு அவசியமான வழிமுறைகளை அதிகாரசபைக்கு முன்மொழிதல்.

**7**. (1) பேரவையானது ஆகக்குறைந்தது மூன்று மாதங்களுக்கொரு தடவையேனும் கூடுதல் வேண்டும். எவ்வாறாயினும், அமைச்சரானவர், மிக முக்கியமான ஏதேனும் கருமமொன்று பற்றிக் கலந்துரையாடுவதற்கான தேவையொன்று எழுந்தால், விசேட கூட்டமொன்றைக் கூட்டலாம். பேரவையின் கூட்டங்கள்.

(2) பேரவையின் கூட்டமொன்றுக்கான கூட்ட நடப்பெண் எட்டு உறுப்பினர்களாதல் வேண்டும்.

## பாகம் III

### நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபை

**8**. (1) (இதனகத்துப்பின்னர் "அதிகாரசபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபை" எனவழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான அதிகாரசபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகார சபையைத் தாபித்தல்.

(2) அதிகாரசபையானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரினால், கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், இடையறா வழியுரிமையையும் பொது இலச்சினையொன்றையும் கொண்டிருத்தலும் வேண்டும் ; அத்துடன் அத்தகைய பெயரில் அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

*அதிகார சபையின் அலுவல்களின் முகாமையும் நிருவாகமும்.*

**9**. (1) அதிகாரசபையின் அலுவல்களினது முகாமையும் நிருவாகமும், (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) முகாமைச் சபையொன்றுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும் ; அது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர் :-

(i) நிர்மாணம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அச்செயலாளரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட சிரேட்ட உதவிச் செயலாளரொருவரின் பதவி வரிசைக்குக் குறையாத அலுவலரொருவர் ; அத்துடன்

(ii) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அச்செயலாளரால் பெயர்குறித்து நியமிக்கப்படுகின்றவரான சிரேட்ட உதவிச் செயலாளர் பதவிவரிசைக்குக் குறையாத பதவியிலுள்ளவரான அலுவலரொருவர் ; அத்துடன்

(ஆ) (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அமைச்சரினால் நியமிக்கப்படுவோரான பின்வரும் பன்னிரெண்டு உறுப்பினர்கள் :-

(i) 1968 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கைப் பொறியியலாளர் நிறுவகச் சட்டத்தின் கீழ்

தாபிக்கப்பட்ட இலங்கைப் பொறியியலாளர் நிறுவகத்தினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட இலங்கைப் பொறியியலாளர் நிறுவகத்தின் உறுப்பினரொருவர் ;

(ii) 1976 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கைக் கட்டிடக்கலைஞர் நிறுவகச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைக் கட்டிடக்கலைஞர் நிறுவகத்தினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட இலங்கைக் கட்டிடக் கலைஞர் நிறுவகத்தின் உறுப்பினரொருவர் ;

(iii) 2007 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கைக் கணிய அளவையாளர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைக் கணிய அளவையாளர் நிறுவகத்தினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட இலங்கைக் கணிய அளவையாளர் நிறுவகத்தின் உறுப்பினரொருவர் ;

(iv) 2003 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, இலங்கை உசாத்துணைப் பொறியியலாளர் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை உசாத்துணைப் பொறியியலாளர் கழகத்தினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட இலங்கை உசாத்துணைப் பொறியியலாளர் கழகத்தின் உறுப்பினரொருவர் ;

(v) இலங்கைத் தேசிய நிர்மாணக் கழகத்தினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட இலங்கைத் தேசிய நிர்மாணக் கழகத்தின் உறுப்பினரொருவர் ;

(vi) இலங்கை நிர்மாணத் தொழில் சம்மேளனத்தினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட இலங்கை நிர்மாணத் தொழில் சம்மேளனத்தின் உறுப்பினரொருவர் ; அத்துடன்

(vii) பேரவையின் உறுப்பினர்களாகவிராத வேறு ஆறு ஆட்கள் ; அவர்களுள் -

(அ) இலங்கையில் நிர்மாணத் தொழிலின் அபி விருத்திக்குக் குறிப்பிடத்தக்கவகையில் பங்களித்துள்ள மூன்று ஆட்கள் ; அவர் களுள் ஒருவர், இலங்கை கூட்டுப் பட்டய எந்திரவியலர் நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை கூட்டுப் பட்டய எந்திரவியலர் நிறுவனத் தின் தலைவரின் வேண்டுகோளின்பேரில் நியமிக்கப்பட்ட ஆளொருவராகவிருத்தல் வேண்டும் ; அத்துடன் ;

(ஆ) பின்வரும் துறைகளைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்கு வேறு மூன்று ஆட்கள் :-

(அ) கமத்தொழில், நீர்வழங்கல் அல்லது சூழல்சார் அறிவியல் ;

(ஆ) பொதுச் சுகாதாரம் அல்லது வாழ்க் கைத்தொழில்சார் சுகாதாரம் ; அத் துடன்

(இ) சமூக, பண்பாட்டு மரபுரிமை அல் லது பாரம்பரிய அறிவு.

(2) அமைச்சரானவர் சபையின் தவிசாளராக இருப்பதற்கென நியமிக்கப்பட்ட உறுப்பினர்களில் ஒருவரை நியமித்தல் வேண்டும்.

(3) அமைச்சரானவர், நியமிக்கப்பட்ட உறுப்பினர்களில், ஒருவரை அதிகாரசபையின் தொழிற்பாட்டுப் பணிப்பாளராக நியமித்தல் வேண்டும் ; அவர் முழுநேர அலுவலராகவிருத்தல் வேண்டும்.

(4) ஆளொருவர் -

(அ) அவர், பாராளுமன்றத்தின் அல்லது ஏதேனும் மாகாண சபையின் அல்லது ஏதேனும் உள்ளூர திகார சபையின் உறுப்பினர் ஒருவராகவிருந்தால் அல்லது வந்தால் ; அல்லது

(ஆ) அவர், இலங்கைப் பிரசையொருவராக இல்லா திருந்தால் அல்லது இல்லாதொழிந்தால் ; அல்லது

(இ) அவர், இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீனமின்மையினால் பீடிக்கப்பட்ட வராகக் காணப்பட்டால் அல்லது வெளிப்படுத் தப்பட்டால் ; அல்லது

(ஈ) அவர், இலங்கையிலுள்ள அல்லது வேறேதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் விதிக் கப்பட்ட மறியற்றண்டனைத் தீர்ப்பை அனு பவித்துக் கொண்டிருந்தால் அல்லது அனுபவித்த வராக இருந்தால் ; அல்லது

(உ) அவர், அதிகாரசபையினால் அல்லது அதன் சார்பில் செய்யப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தின்கீழ் ஏதேனும் உரிமையை அல்லது நன்மையைக் கொண்டிருந்தால் அல்லது துய்த்தால் ; அல்லது

(ஊ) அவர், சபையின் உறுப்பினரொருவராகத் தமது பணிகளை நிறைவேற்றுவதனைப் பங்கமான முறையில் பாதிக்கப்படக்கூடியவாறான ஏதேனும் நிதிசார் அல்லது வேறு அக்கறையைக் கொண் டிருந்தால்,

சபையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்திருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்.

(5) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும், இறப்பின் மூலம், பதவியிலிருந்து நீங்குவதன்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம் முன்னரே பதவியை வறிதாக்கி னாலொழிய, அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டுக் காலப்பகுதியொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன், அவர் பதவியிலிருந்து அகற்றப்பட்டிருந்தாலொழிய, மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(6) (அ) அமைச்சர் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம், குறித்துக்காட்டப்பட்ட காரணங்களுக்காக எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றலாம். இப்பிரிவின்கீழ் எந்த உறுப்பினர் தொடர்பில் கட்டளையொன்று அவ்வாறு ஆக்கப்படுகின்றதோ அந்த உறுப்பினர், அக்கட்டளை யானது எத்தேதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டதோ அத்தேதியன்று பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

(ஆ) எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர், எந்நேரத்தி லேனும், அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்பட்டதும், பதிவஞ்சல் அனுப்பப்பட்டதும், அப்பொருள்பட்டதுமான கடிதமொன்றின் மூலம் பதவியிலிருந்து நீங்கலாம்.

(இ) ஒன்பதாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் தரப்பட்டுள்ள ஒழுங்கமைப்பொன்றினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர், இறப்பின்மூலம், பதவியிலிருந்து நீங்குவதன்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மூலம் பதவியை வறிதாக்கும்பட்சத்தில், அமைச்சரானவர், அத்தகைய ஒழுங்கமைப்பினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவாறு அத்தகைய உறுப்பினரை அடுத்துறுவதற்கு வேறெவரேனுமாளை நியமிக்கலாம். அத்தகைய உறுப்பினர் ஒழுங்கமைப்பொன்றினால் பெயர்குறித்து நியமிக்கப்படவில்லை யாயின், அப்போது அமைச்சர், அத்தகைய உறுப்பினரை அடுத்துறுவதற்கென அத்தகைய ஒழுங்கமைப்பிலிருந்து பொருத்தமான ஆளொருவரை நியமிக்கலாம். அவ்வாறு நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர், அவர் எந்த உறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரின் முடிவுறாதெஞ் சியுள்ள பதவிக்காலத்துக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(ஈ) ஒழுங்கமைப்பொன்றினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவரின் விடயத்தில், அத்தகைய உறுப்பினரின் பெயர்குறித்த நியமனமானது இயைபான ஒழுங்கமைப்பினால் மீளப்பெறப்படுவதன்மேல், அத்தகைய உறுப்பினர், சபையின் உறுப்பினரொருவராகப் பணியாற்றாதொழிதல் வேண்டும்.

(உ) நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், மூன்று மாதங்களுக்குக் குறையாதவொரு காலப்பகுதிக்குச் சுகவீனம், உடற்றகுதியீனம் அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாகத் தமது கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவிருக்குமிடத்து, அத்தகைய இயலாமை பற்றி எழுத்தில் அமைச்சருக்கு அறிவிப்பது அத்தகைய உறுப்பினரின் கடமையாதல் வேண்டும். அமைச்சர், அதன்மேல், அவரின் இடத்தில் செயலாற்றுவதற்கென, இயைபான ஒழுங்கமைப்பினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட வேறோராளை அல்லது ஏதேனும் ஒழுங்கமைப்பினால் அத்தகைய உறுப்பினர் பெயர்குறித்து நியமிக்கப்படாவிடில், எவரேனும் பொருத்தமான ஆளை நியமிக்கலாம்.

(7) அமைச்சர், குறித்துக்காட்டப்பட்ட காரணங்களுக்காக, சபையின் தவிசாளரை அல்லது தொழிற்பாட்டுப் பணிப்பாளரை அகற்றலாம்.

(8) தவிசாளர் அல்லது தொழிற்பாட்டுப் பணிப்பாளர் சுகவீனம், உடற்றகுதியீனம் அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாகத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவிருப்பின், அமைச்சர், அவரின் இடத்தில் செயலாற்றுவதற்கென சபையின் வேறோர் உறுப்பினரைப் பெயர்குறித்து நியமிக்கலாம்.

(9) தவிசாளர், அல்லது தொழிற்பாட்டுப் பணிப்பாளர் எந்நேரத்திலேனும், அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதமொன்றின்மூலம் தவிசாளரின் அல்லது தொழிற்பாட்டுப் பணிப்பாளரின் பதவியிலிருந்து நீங்கலாம். அத்தகைய பதவிநீங்குகை, எழுத்தில் அமைச்சரினால் ஏற்றுக்கொள்ளப்படுவதன்மேல் பயனுறுதல் வேண்டும்.

(10) இரண்டாம் மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைவாக, தவிசாளரின் அல்லது தொழிற்பாட்டுப் பணிப்பாளரின் பதவிக்காலம் மூன்றாண்டுகளாதல் வேண்டும். தவிசாளர் மற்றும் தொழிற்பாட்டுப் பணிப்பாளர் மீள்நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

(11) சபையின் தவிசாளருக்கும், தொழிற்பாட்டுப் பணிப் பாளருக்கும், நியமிக்கப்பட்ட உறுப்பினர்களுக்கும், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் கலந்தாலோ சனையுடன் அமைச்சர் தீர்மானிக்கப்படக்கூடியவராக அதிகார சபையின் நிதியத்திலிருந்து அத்தகைய ஊதியம் செலுத்தப் படலாம்.

(12) சபையின் தவிசாளர் சபையின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைமைதாங்குதல் வேண்டும். தவிசாளர் ஏதேனும் கூட்டத்திற்கு வருகைதராதிருக்கையில், சமுகமாயிருக்கும் உறுப்பினர்கள், அத்தகைய கூட்டத்தில் தலைமைதாங்குவதற்கெனத் தமது உறுப் பினர்களிடையேயிருந்து ஒருவரைத் தேர்நதெடுத்தல் வேண்டும்.

சபையின் கூட்டங்கள்.

**10.** (1) சபையின் கூட்டத்திற்கான கூட்டநடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டுமென்பதுடன், சபையானது, இச் சட்டத்தில் ஏனைய ஏற்பாடுகளுக்கமைவாக, சபையின் கூட்டங்கள் தொடர்பிலும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநாத்துதல் தொடர்பிலுமான நடவடிக்கைமுறையையும் ஒழுங்குபடுத்தலாம்.

(2) சபையின் ஏதேனும் கூட்டத்திற்குத் தலைமைதாங்குகின்ற தவிசளர் அல்லது உறுப்பினர், வாக்குகள் சமமாகவுள்ளவிடத்து தமது சொந்த வாக்குடன் சேர்த்து, மேலதிகமாக, அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) சபையானது, ஒவ்வொரு மாதமும் ஒருதடவையாவது கூடுதல் வேண்டும்.

(4) சபையின் செயல், முடிபு அல்லது நடவடிக்கை எதுவும், சபையில் ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது அதன் எவரேனும் உறுப்பினரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு உள்ளதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது.

*அதிகாரச சபையின் இலச்சினை.*

**11.** (1) அதிகாரசபையின் இலச்சினையானது -

(அ) அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதியின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும் ;

(ஆ) அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம் ; அத்துடன்

(இ) அதிகாரசபையின் அனுமதியுடனும் அதிகார சபையின் தவிசாளரினதும் இன்னுமோர் உறுப்பினரினதும் சமுகத்திலும் அன்றி, ஏதேனும் சாசனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது ; அவர்கள் தாம் சமுகமாயிருந்தனர் என்பதற்கு அத்தாட்சியாக அச்சாசனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கையொப்பிடுதலானது சாட்சியொருவராக எவரேனும் ஆள் கையொப்பமிடுவதிலிருந்து தனிவேறானதாதலும் வேண்டும்.

(2) அதிகாரசபையின் இலச்சினை எந்தச் சாசனங்களில் அல்லது ஆவணங்களில் பொறிக்கப்படுகின்றதோ அந்தச் சாசனங்களும் ஆவணங்களும் பற்றிய இடாப்பொன்றை அதிகார சபை பேணுதல் வேண்டும்.

*அதிகார சபையின் குறிக்கோள்கள்.*

**12.** அதிகாரசபையின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் :-

(அ) மூன்றாம் பிரிவின்கீழ் அமைச்சரால் வழங்கப்பட்ட பணிப்புகளுடன் நிர்மாணம்மீதான தேசியக் கொள்கையின் நடைமுறையை உறுதிப்படுத்துதல் ;

(ஆ) நிர்மாணத்துறையின் நிலைபெறுதகு வளர்ச்சி, மறுசீரமைப்பு மற்றும் சீராக்கலை ஊக்கப்படுத்துவதற்கு நிர்மாணத் தொழிலில் அக்கறைகொண்டுள்ளோருக்கு மூலோபாயஞ்சார் தலைமைத்துவத்தை ஏற்பாடு செய்தல் ;

(இ) காலத்துக்குக்காலம் விதித்துரைக்கப்பட்டவாறான நிர்மாணத் தொழிலின் அக்கறை கொண்டுள்ளோரைப் பதிவுசெய்தலும் அத்தகைய பதிவினை மீளப் புதுப் பித்தலும் ;

(ஈ) வலுவினைத்திறனான கட்டிடங்கள் மற்றும் கட்ட மைப்புகளின் வடிவமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான விசேட கவனத்துடன் நிர்மாணத் தொழிலின் நிலை பெறுதகு வளர்ச்சியை மேம்படுத்துதல் ;

(உ) நிர்மாணத்தொழில் மற்றும் அதன் அபிவிருத்தி தொடர்பான ஏதேனும் கருமம்மீது தோதான ஆராய்ச்சியையும் மற்றும் ஆராய்ச்சி வேலையின் பரப்புகையையும் வெளியீட்டையும் மேம்படுத்துதல் ;

(ஊ) வேறு இயைபான அதிகாரசபைகளுடனான கலந்தா லோசனையுடன், நிர்மாணத் தொழிலான நியமங்களை வகுத்தமைத்தல் மற்றும் அத்தகைய நியமங்களை கட்டாயமான மற்றும் தன்னிச்சையான நியமங்களாக வகுதிப்படுத்துதலும் ; அத்துடன்

(எ) அதிகாரசபையினால் வகுத்தமைக்கப்பட்ட நிர்மாணத் தொழிலுடன் தொடர்புடைய நடத்தை பற்றிய கோவை, பழக்கங்கள், நடவடிக்கைமுறைகள் மற்றும் நடவடிக்கை களை நடைமுறைப்படுத்துதல்.

*அதிகார சபையின் பணிகள்.*

**13**. அதிகாரசபையின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) மூன்றாம் பிரிவின்கீழ் அமைச்சரால் வழங்கப்பட்ட பணிப்புகளுடன் 2 ஆம் பிரிவின்கீழ் வகுத்தமைக்கப்பட்ட நிர்மாணம் மீதான தேசிய கொள்கையை நடைமுறைப் படுத்துதல் ;

(ஆ) நிர்மாணத் தொழிலின் அபிவிருத்திக்கான மூலோ பாயங்களை வகுத்தமைத்தல் ;

(இ) நிர்மாணத் தொழில் தொடர்பான வெளியீடுகளையும் தகவலையும் சேகரித்தலும் வெளியிடுதலும் ;

(ஈ) நிர்மாணத் தொழில் தொடர்பான சிறந்த வழக்கங்களை மேம்படுத்துதலும் ;

(உ) வேறு இயைபான குழுக்களுடனான கலந்தாலோசனையுடன் நிர்மாண வேலையில் பயன்படுத்தப்பட்ட பொருட்களின் தரம் மற்றும் வேலைப்பாடு தொடர்பான நியமம் உட்பட நிர்மாண வேலையில் நியமங்களை நடைமுறைப் படுத்துதல் ;

(ஊ) நிர்மாணத் தொழில் தொடர்பான வேலைகளையும் பண்டங்களையும், சேவைகளையும் பெறுதல் தொடர்பான தேசியப் பெறுகை வழிகாட்டுநெறிகளை வகுத்தமைக்குமாறு ஏதேனும் இயைபான அதிகாரசபைக்கு பரிந்துரை செய்தல் ;

(எ) நிர்மாணத்தின் வேறுபட்ட துறைகளில் பிரபல்யமான எய்துகைகளுக்கான நிர்மாணத் திறமைக்குத் தேசிய விருதுகளின் மற்றும் வலு வினைத்திறனான கட்டிடங்கள், கட்டமைப்புகள் மற்றும் நிர்மாணத் தொழில் நுட்பங்களின் வடிவமைப்பு மற்றும் அபிவிருத்திக் கெனத் தேசிய விருதுகளின் வழங்கலை ஏற்பாடு செய்தலும் ஒழுங்குபடுத்துதலும் ;

(ஏ) நிர்மாணத் தொழிலுள்ள தொழிலாண்மையையினதும் மற்றும் தொழிலினதும் நியமங்களை மேம்படுத்துதல் ;

(ஐ) இலங்கை நிர்மாண ஒப்பந்தக்காரர்களின் தொழில் துறை உரிமையாண்மையை வளர்த்தலும் மேம்படுத்துதலும் ;

(ஒ) நிர்மாண ஒப்பந்தக்காரர்களின் பதிவுக்கும் தரப்படுத்துகைக்கும் ஏற்பாடுசெய்தல் ;

(ஓ) ஆதன அபிவிருத்தியாளர்களை பதிவுசெய்வதற்கும் மற்றும் அவர்களை நிதிசார் மற்றும் சந்தைப்படுத்தல் ஆற்றல்களின் கீழ் தரப்படுத்துவதற்கும் ஏற்பாடு செய்தல் ;

(ஔ) ஒப்பந்தஞ்சார் பிணக்குகளின் தீர்த்துவைப்பாளர்களாகப் பணியாற்றுவதற்குத் தகுதிவாய்ந்த ஆட்களின் பதிவுக்கு ஏற்பாடுசெய்தல் ;

(க) இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட விதிகளின் மூலம் தீர்மானிக்கப்பட்டவாறாக, நிர்மாணத் தொழிலில் பயன்படுத்தப்பட்ட நிர்மாணப் பொருட்கள் மற்றும் நிர்மாண ஆக்கக்கூறுகளின் இறக்குமதியாளர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் வழங்குநர்களின் விபரக்கொத்தொன்றினைப் பேணுதல் ;

(ங) இருபத்தாறாம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறு தகைமைபெற்ற ஆட்களின் இடாப்பொன்றைப் பேணுதல் ;

(ச) இலத்திரனியல் பொறிமுறை நிறுவுகைகள், வேறேதேனும் கட்டிடப் பொருத்திகள் என்ற துறைகளிலும் நிர்மாணம் தொடர்பான வேறு ஏதேனும் நிர்மாணங்கள் தொடர்பான இடப்பரப்பிலும் விசேடித்த பயிற்சி பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்களின் பதிவுக்காக ஏற்பாடு செய்தல் ;

(ஞ) இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளால் தீர்மானிக்கப்பட்டவாறான நிர்மாணிக்கப்பட்டவாறான நிர்மாணத் தொழில்களின் திறமையுள்ள வேலையாட்களுக்கு கைவினை அடையாள அட்டைகளை பதிவு செய்வதற்கும் வழங்குவதற்கும் ஏற்பாடுசெய்தலும் ;

(ட) நாட்டில் கிடைக்கக்கூடியதாகவுள்ள பாரமான நிர்மாணப் பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி மற்றும் சாதனங்களின் விபரக்கொத்தொன்றினைப் பேணுதல்;

(ண) நிர்மாணத் தொழிலுக்குத் தேவைப்படும் மனிதவள அபிவிருத்தி மற்றும் பயிற்சியைப் பொறுப்பேற்றலும் அதற்கு வசதியளித்தலும் மற்றும் இயைபான தேசிய முகவராண்மைகளின் ஒருப்பாட்டுடன் பயிற்சி மற்றும் மதிப்பீட்டிற்கான தேசிய நியமங்களை அபிவிருத்தி செய்தலும் ;

(த) நிர்மாணத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களான திறமையுள்ள வேலையாட்களின் தகைமையை மதிப்பீடுசெய்தலும் மற்றும் அத்தகைய சான்றிதழ்களை வைத்திருக்காத அத்தகைய ஆட்களுக்கு சான்றிதழ்களை வழங்குதலும் ;

(ந) நிர்மாணத் தொழிலின் மனிதவளத் தேவைப்பாடுகளை பரிசீலனை செய்தலும் கண்காணித்தலும் மற்றும் புதிதாகத் தலையெடுக்கின்ற தொழில்களுக்கெனப் பாடவிதானங்களின் அபிவிருத்தியை வசதிப்படுத்து தலும் ;

(ப) நிர்மாணத் தொழில் சம்பந்தமான உள்நாட்டு ஆலோசனைச் சேவைகளை மேம்படுத்துதலும் அதற்கு வசதியளித்தலும் அத்துடன் உள்நாட்டு ஆலோசனைக் குழுமங்களினால் வேறு நாடுகளில் உள்ள ஆலோ சனைச் சேவைகளைப் பொறுப்பேற்றலும் ;

(ம) வேறு நாடுகளில் நிர்மாண வேலைகளைப் பொறுப் பேற்கும் உள்நாட்டில் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக் காரர்களை மேம்படுத்துதலும் அவர்களுக்கு வசதி யளித்தலும் ;

(ய) நிர்மாணத் தொழில் தொடர்பான கருமங்களில் தகவல் மற்றும் மதியுரை வழங்குதல் ;

(ர) சூழலுக்கொத்த, தோதான, செலவுகுறைந்த மற்றும் கட்டுப்படியாகும் புத்தாக்கங்கள் தொடர்பான புதிய தொழில்நுட்பவியல்கள் கடைப்பிடிக்கப்படுவதனையும் பரப்பப்படுவதனையும் மேம்படுத்துதலும், ஊக்கப் படுத்துதலும் ;

(ல) நிர்மாணத் தொழிலின் ஏதேனும் பொருள், பொறித் தொகுதி மற்றும் எந்திரத்தொகுதி என்பவற்றிற்கான தேவைப்பாட்டைப் பரிசீலனை செய்தலும் கண்காணித்தலும் அத்துடன் நிர்மாண வேலைகளில் உள்நாட்டு உற்பத்திப்பொருட்களின் அபிவிருத்தி மற்றும் பயன்பாட்டினை ஊக்குவித்தலும் ;

(வ) நிர்மாணத் தொழிலின் பல்வேறு கிளைகளில் ஆராய்ச்சியைப் பொறுப்பேற்றலும், மேம்படுத்துதலும், ஒருங்கிணைத்தலும் மற்றும் நிர்மாணத் தொழிலின் தரத்தையும் உற்பத்தித் திறனையும் சீராக்குவதற்காகப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதலும் ;

(அஅ) நிர்மாணத் தொழிலுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் தமது செயற்பாடுகளை அபிவிருத்தி செய்வதில் அவற்றுக்கு உதவுதல் ;

(ஆஆ) எவரேனும் முதியோரால் அல்லது மாற்றுத் திறனுடைய ஆட்களால் அத்தகைய கட்டிடங்கள் இலகுவாக, அணுக்கத்தையுடையதாயிருத்தலுக்கும் மற்றும் பயன்படுதலுக்கும் வசதியளிக்கக்கூடியவாறான ஒருமுறையில், அவசியமாகவுள்ளவிடத்து ஏதேனும் கட்டிடத்தின் நிர்மாணத்தை மேம்படுத்துதல் ;

(இஇ) நிர்மாணத் தொழிலின் மேம்படுத்துகைக்கான வேறேதேனும் செயற்பாட்டைப் பொறுப்பேற்றல் அல்லது அதற்கு உதவுதல் ;

(ஈஈ) நிர்மாணத் தொழில் மீதான தேசியத் தரவுத் தளமொன்றைப் பேணுதல் ;

(உஉ) நிர்மாணத் தொழிலில் உடல்நலத்திற்கும் காப்புக்குமான நியமங்களையும் மற்றும் ஆபத்தான பொருட்களின் பயன்பாட்டையும் ஒழுங்குபடுத்துவதற்கு இயைபான அதிகாரசபைக்கு விதப்புரை செய்தல் ;

(ஊஊ) நிர்மாண மற்றும் முகாமைத்துவச் செய்முறை களையும் மற்றும் நிர்மாண வேலைகளின் விளைவையும் தொழில்நுட்பக் கணக்காய்வு செய்வதற்கான நியமங்களைத் தாபித்தலும் மற்றும் விதிக்கப்பட்ட நிபந்தனைகளுடனும் அங்கீகரிக்கப்பட்ட நியமங்களுடனும் இணங்கி யொழுகுவதனை உட்படுத்துகின்றவாறு அவற் றைக் கண்காணித்தலும் ;

(எஎ) ஏதேனும் கருத்திட்டத்தை அல்லது பொறுப்பு முயற்சியை ''அடையாளம் காணப்பட்ட நிர்மாண வேலை'' என வெளிப்படுத்தும்படி அமைச்சருக்கு விதந்துரைத்தல்.

அதிகார சபையின் தத்துவங்கள்.

**14.** அதிகாரசபையானது, இச்சட்டத்தின்கீழ் அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமானவாறான அல்லது அதன் இடைநேர்விளைவான அத்தகைய தத்துவங்களை, குறிப்பாகப் பின்வருவனவற்றுக்கான தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை ஏதேனும் முறையில் கொள்ளுவதற்கும், வைத்திருப் பதற்கும், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுப் பதற்கும் அல்லது கொடுப்பதற்கும், ஈடுவைப்பதற்கும், அடைமானம் வைப்பதற்கும், விற்பனை செய்வதற்கும் அல்லது வேறுவகையாகக் கையுதிர்ப்பதற்கும் ;

(ஆ) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அலுவலர்களையும், சேவையாளர்களையும், முகவர்களையும் நியமிப்பதற் கும், தொழிலுக்கமர்த்துவதற்கும், அவர்களுக்கு ஊதிய மளிப்பதற்கும் மற்றும் அத்தகைய அலுவலர்கள், சேவையாளர்கள் மற்றும் முகவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிப்பதற்கும் ;

(இ) அதிகாரசபையின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந் தங்களையும் நேரடியாகவோ அல்லது அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் சேவையாளர் அல் லது முகவர் ஊடாகவோ செய்துகொள்வதற்கும் மற்றும் புரிவதற்கும் ;

(ஈ) நிதி அமைச்சின் முன்னங்கீகாரத்துடன் ஏதேனும் அரசுக்குச் சொந்தமான வங்கி அல்லது வேறு ஏதேனும் நிதி நிறுவனத்தில் கணக்குகளை திறத்தற்கும், பேணுவதற்கும் மற்றும் முடிவிடுவதற்கும் ;

(உ) அதிகாரசபையின் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்திற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய பணத் தொகைகளைக் கடனாகப் பெறுவதற்கும் ;

(ஊ) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே உள்ள மூலங்களிலிருந்து அசைவுள்ளவையும் அல்லது அசைவற்றவையுமான ஆதனங்களின் மானியக்கொடைகளையும், நன்கொடைகளையும், இறுதிவிருப்பாவணக் கொடைகளையும் ஏற்றுக்கொள்வதற்கும், பெறுவதற்கும் மற்றும் அதிகாரசபையின் பணிகளை நிறைவேற்றுவதற்காக அவற்றைப் பயன்படுத்துவதற்கும் :

ஆயின், அதிகாரசபையானது எல்லா வெளிநாட்டு மானியக்கொடைகள், நன்கொடைகள் மற்றும் இறுதி விருப்பாவணக் கையளிப்பு தொடர்பில் நிதி என்னும் விடயம் குறித்தொதுக்கப்பட்ட அமைச்சரின் வெளிநாட்டு மூலவளங்கள் அமைச்சின் பணிப்பாளர் தலைமையதிபதியின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் ;

(எ) அதிகாரசபையின் அலுவல்களினது நிருவாகத்திற்காக விதிகளை ஆக்குவதற்கும் ;

(ஏ) நிர்மாணத் தொழில் வழங்குநர் சேவையின் கட்டணம் அல்லது விதிப்பனவுகளை அறவிடுதலும் அதிகார சபையினால் அளிக்கப்பட்ட ஏதேனும் சேவைக்காக விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பதிவு அல்லது கட்டணங்களை மீளப் புதுப்பித்தலும் ; அத்துடன்

(ஐ) அதிகாரசபையின் அபிப்பிராயத்தில் அதிகாரசபையின் பணிகளைத் தகுந்தமுறையில் நிறைவேற்றுவதற்குக் காலத்திற்குக்காலம் அவசியமாகவிருக்கின்ற அல்லது அதன் இடைநேர்விளைவாகவிருக்கின்ற அத்தகைய வேறெல்லாச் செயல்களையும் காரியங்களையும் செய்வதற்கும்.

*அதிகார சபையின் பணிப்பாளர் தலைமையதிபதி.*

**15.** (1) பணிப்பாளர் தலைமையதிபதி ஒருவர் நியமிக்கப்படுதல் வேண்டும். அவர், நிர்மாண மற்றும் முகாமைத்துவத்துறையில் அனுபவத்தையும் தகைமைகளையும் உடையவராதல் வேண்டும். பணிப்பாளர் தலைமையதிபதி பகிரங்க அலுவலரொருவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, சபையின் தவிசாளரின் பொதுவான பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைவாக, அதிகாரசபையின் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் நிருவாகத்திற்கும் கட்டுப்பாட்டிற்கும் பொறுப்பாதல் வேண்டும்.

*அதிகார சபையின் பணியாட் டொகுதி.*

**16.** அதிகாரசபையானது, அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் வினைத்திறனுடன் பிரயோகிப்பதற்கும், நிறைவேற்றுவதற்கும், புரிவதற்கும் அவசியமென அது கருதுகின்றவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிக்கலாமென்பதுடன், அத்தகைய அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் செலுத்தப்படற்பாலதான ஊதியத்தையும், அவர்களின் சேவை நிபந்தனைகளையும் மற்றும் அவர்கள் மீதான ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டையும் தீர்மானித்தலும் வேண்டும்.

*பகிரங்க அலுவலர்களை நியமித்தல்.*

**17.** (1) அதிகாரசபையின் வேண்டுகோளின்பேரில், பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அவ்வலுவலரினதும் பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்கான செயலாளரினதும் சம்மதத்துடன், அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும், அலுவலர், அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அதிகார சபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படு மிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கு அரசாங்கத் திற்குச் சேவையாற்றுவதற்கு உடன்பட்டு அரசாங்கத்துடன் ஒப்பந் தத்தைச் செய்துகொண்டுள்ள எவரேனுமாளை அதிகாரசபை தொழிலுக்கமர்த்துவிடத்து, அவ்வாளினால் அதிகாரசபைக்கு ஆற்றப்பட்ட ஏதேனும் சேவைக்காலப்பகுதியானது, அத்தகைய ஒப்பந்தத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அரசாங்கத்திற்கு ஆற்றப்பட்ட சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) அதிகாரசபையின் வேண்டுகோளின்பேரில் மாகாணப் பகிரங்க சேவையில் உள்ள எவரேனும் அலுவலர், அவ்வலு வலரினதும் மற்றும் இயைபான மாகாணப் பகிரங்க சேவை ஆணைக்குழுவினதும் சம்மதத்துடன், அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு, அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

*நிர்மாண நியமங்களை நடைமுறைப் படுத்துவதற்குக் குழுக்களை நியமித்தல்.*

**18.** (1) அதிகாரசபையானது நிர்மாணத் தொழிலில் அந்தந்த இடப்பரப்புகளில் நிர்மாண நியமங்களை வகுத்தமைப்பதற்குப் பின்வரும் குழுக்களை அதிகாரசபை நியமித்தல் வேண்டும் :-

(அ) தொழில்நுட்ப நியமங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் குழு ;

(ஆ) சூழல்சார் மற்றும் பொதுச் சுகாதார நியமங்கள் மீதான குழு ;

(இ) ஒழுக்க மற்றும் சமுகப் பொறுப்புடைமை மீதான நியமங்கள் குழு.

(2) அத்தகைய குழுக்களின் உறுப்பினர்கள், இயைபான உயர் தொழில் குழுக்களின் மற்றும் வேறு சமூக மற்றும் சூழல் ஒழுங்கமைப்புக்களின் ஆலோசனையுடன் அதிகாரசபையினால் தெரிவு செய்யப்படுதல் வேண்டும்.

## பாகம் IV

## நிர்மாணத் தொழில் அபிவிருத்தி நிதியமும் அதிகாரசபையின் நிதியமும்

**19.** (1) (இச்சட்டத்தில் "அபிவிருத்தி நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிர்மாணத் தொழில் அபிவிருத்தி நிதியமென அறியப்படும் நிதியமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். நிர்மாணத் தொழில் அபிவிருத்தி நிதியம்.

(2) பின்வருவன அபிவிருத்தி நிதியத்தினுட் செலுத்தப்படுதல் வேண்டும் :-

(அ) வெளிநாட்டு மூலவளங்களிலிருந்தேனுஞ்சரி அல்லது உள்நாட்டு மூலவளங்களிலிருந்தாயினுஞ்சரி கடன்கள், வாடகைகள், நன்கொடைகள், கொடைகள் அல்லது மானியக்கொடைகள் என்ற வகையாக அபிவிருத்தி நிதியத்தினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(ஆ) நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அறவீடாக சேகரிக்கப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும்.

(3) இச்சட்டத்தின்கீழான தத்துவங்களைப் பிரயோகிக்கையிலும் மற்றும் பணிகளை நிறைவேற்றுகையிலும் அபிவிருத்தி நிதியத்தினால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத்

தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும், பின்வரும் வழிகாட்டுநெறிகளுக்கமைவாக, அபிவிருத்தி நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் :-

(அ) நிதியத்தின் ஐம்பது சதவீதத்துக்கு (50%) அதிகமானது, சிறிய அளவிலான ஒப்பந்தக்காரர்களினதும் சுய தொழில்புரியும் பதிவு செய்யப்பட்ட கைவினைஞர் களினதும் நல்வாழ்வுக்காக ஒதுக்கிவைக்கப்படுதல் வேண்டும் ;

(ஆ) நிதியத்தின் ஐந்து சதவீதத்துக்கு (5%) குறையாதது, நிர்மாணத் தொழில் தொடர்பான துறையிலான ஆராய்ச்சிக்கும் வெளியீடுகளுக்கும் ஒதுக்கிவைக்கப் படுதல் வேண்டும் ;

(இ) நிதியத்தின் ஐந்து சதவீதத்துக்கு (5%) குறையாதது, சூழலுக்கு ஒத்த, சிக்கமான நிர்மாணத் தொழினுட்பங் களின் கண்டுபிடிப்புகளுக்கும் பிரயோகங்களுக்கும், பரப்புகைக்கும் வெகுமதியளித்து அவற்றை ஊக்கு விக்கும் நோக்கத்துக்காக ஒதுக்கி வைக்கப்படுதல் வேண்டும் ;

(ஈ) வேறேதேனும் சட்டத்தின்கீழ் வேறேதேனும் வகையின தான இளைப்பாற்று நன்மைகளுக்கு உரித்துடை யோராகவிராதவர்களும், அதிகாரசபையுடன் பதிவு செய்யப்பட்டவர்ளுமான கைவினைஞர்களுக்காக, ஓய்வூதிய நன்மைகளுடன் கூடிய நீண்டகாலக் காப்புறுதியை ஒழுங்கேற்பாடு செய்வதற்குத் தேவைப் படுகின்றதென, அதிகாரசபையினால் தீர்மானிக்கப் படுகின்றவாறான அத்தகைய தொகை.

(4) (அ) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, நிர்மாணத் தொழில் என்னும் விடயம் எவ்வமைச்சருக்கு குறித்தொதுக்கப்பட் டுள்ளதோ அவ்வமைச்சரானவர், ''நிர்மாணத் தொழில் அபி விருத்தித் தீர்வை'' எனவழைக்கப்படவேண்டிய தீர்வை அற

வீடொன்றை விதித்தல் வேண்டும். அவ்வாறு அறவிடப்பட வேண்டிய தீர்வை வீதம், கருத்திட்டங்களின் நிர்மாணச் செலவின் விதமொன்றாக நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் நிர்மாணம் என்னும் விடயம் எவ்வமைச்சருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அவ்வமைச்சரால் தீர்மானிக்கப்பட்டவாறானதாக இருத்தல் வேண்டும். தீர்மானிக்கப்பட்டவாறான அத்தகைய ஒவ்வொரு வீதமும் பாராளுமன்றத்தில் அதன் அங்கீகாரத்துக்கென இடப்படுதல் வேண்டும்.

(ஆ) அமைச்சரானவர் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் தீர்மானிக்கப்பட்டவாறான தீர்வை வீதத்தைக் காலத்துக்குக் காலம் குறித்துரைத்தல் வேண்டும். இப்பந்தியின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையானது வர்த்தமானியிலான அத்தகைய கட்டளையின் வெளியீட்டுத் தேதியன்றிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(இ) இப்பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட அறவீடானது நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமை யதிபதியால் சேகரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், நிர்மாணத் தொழில் அபிவிருத்தி நிதியத்துக்கு வைப்பிலிடப்படுதலும் வேண்டும்.

**20.** (1) அபிவிருத்தி நிதியத்தின் அலுவல்களின் முகாமையும் நிருவாகமும் நிர்மாணம் மீதான தேசிய மதியுரைப் பேரவைக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும். *அபிவிருத்தி நிதியத்தின் முகாமை மற்றும் நிருவாகம்.*

(2) அமைச்சரானவர், 19 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) என்னும் பந்திகளுக்கமைவாக, எம் முறையில் அபிவிருத்தி நிதியம் நிருவகிக்கப்படுதல் வேண்டுமோ அம்முறையைக் குறித்துரைக்கின்ற ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

**21.** பகிரங்கக் கூட்டுத்தாபனங்களினது கணக்குகளின் கணக் காய்வு தொடர்பிலான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப் புரையின் ஏற்பாடுகள், அபிவிருத்தி நிதியத்தினது கணக்குகளின் கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும். *கணக்குகளின் கணக்காய்வு.*

*1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் ஏற்புடைமை.*

**22.** ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தோராம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் II இன் ஏற்பாடுகள், அபிவிருத்தி நிதியத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்கு ஏற்ற மாற்றங் களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*அதிகாரசபையின் நிதியம்.*

**23.** (1) அதிகாரசபையானது, (இச்சட்டத்தில் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அதன் சொந்த நிதியத்தைக் கொண் டிருத்தல் வேண்டும்.

(2) பின்வருவன அதிகாரசபையின் நிதியத்தினுட் செலுத்தப்படு தல் வேண்டும் :-

(அ) அதிகாரசபையின் பணியாட்டொகுதியினது சம்பளங் களையும் வேறு வேதனாதிகளையும் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவையான அத்தகைய பணத் தொகைகள் உட்பட அதிகாரசபையின் பயன்பாட் டுக்காகப் பாராளுமன்றத்தினால் காலத்திற்குக்காலம் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும் ;

(ஆ) அதிகாரசபையின் தத்துவங்கள், பணிகள், கடமைகள் என்பவற்றைப் பிரயோகிப்பதிலும், நிறைவேற்றுவதி லும், புரிவதிலும் அதனால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ; அத்துடன்

(இ) கடன்கள், வாடகைகள், நன்கொடைகள், கொடைகள், மானியக்கொடைகள் அல்லது அறவீடுகள் மற்றும் சொத்துக்களின் விற்பனை என்ற வகையாக அதிகார சபையினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

(3) இச்சட்டத்தின்கீழ் அதிகாரசபையானது, அதன் தத்துவங் கள், பணிகள் மற்றும் கடமைகள் என்பவற்றைப் பிரயோகிப்பதில், நிறைவேற்றுவதில் மற்றும் புரிவதில் அதனால் உறப்பட்ட ஏதே னும் செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவைப்படு கின்றவாறான அத்தகைய பணத்தொகைகள் எல்லாம், அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**24.** பகிரங்கக் கூட்டுத்தாபனங்களினது கணக்குகளின் கணக்காய்வு தொடர்பாக அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், அதிகாரசபையின் நிதியத்தினது கணக்குகளின் கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

*கணக்குகளின் கணக்காய்வு.*

**25.** ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தோராம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் II இன் ஏற்பாடுகள், அதிகாரசபையின் நிதியத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் ஏற்புடைமை.*

## பாகம் V

### தகைமைபெற்ற ஆட்கள்

**26.** (1) அதிகாரசபையானது, (இதனகத்துப்பின்னர் "தகைமை பெற்ற ஆட்களின் இடாப்பு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பின்வரும் கற்கைத்துறைகளில் தகைமைபெற்ற ஆட்களாகவிருக்கின்றவர்களென நம்பிக்கைசார் குழுக்களினால் விதந்துரைக்கப்பட்ட ஆட்களின் இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும்:-

*தகைமைபெற்ற ஆட்கள் பற்றிய இடாப்பு.*

(அ) எந்திரவியல், 1968 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கைப் பொறியியலாளர் நிறுவகச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைப் பொறியியலாளர் நிறுவகத்துடனான கலந்தாலோசனையுடன் ;

(ஆ) கட்டிடக்கலை ; 1976 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கைக் கட்டிடக்கலைஞர்கள் நிறுவகச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைக் கட்டிடக் கலைஞர்கள் நிறுவகத்தினதும் மற்றும் கட்டிடக்கலைஞர் பதிவுச் சபையினதும் கலந்தாலோசனையுடன் ;

(இ) கணியமதிப்பீட்டியல் ; 2007 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கைக் கணிய அளவையாளர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைக் கணிய அளவையாளர்கள் நிறுவகத்தின் கலந்தாலோசனையுடன் ;

(ஈ) சூழல்சார் மற்றும் பொதுச் சுகாதாரப் பொறியியல் ; இயைபான உயர்தொழிற்சார் மற்றும் கல்விசார் குழுக்களின் கந்தாலோசனையுடன் ; அத்துடன்

(உ) (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) என்னும் பந்திகளின்கீழ் குறித்துரைக்கப்படாததும் மற்றும் இயைபான கல்விசார் அல்லது உயர்தொழிற்சார் குழுக்களின் அல்லது பாராளுமன்றச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நிர்மாணத் தொழில் தொடர்பான ஏதேனும் பதிவுச் சபையின் விதப்புரையின்மேல், (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) என்னும் பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட துறைகள் தொடர்பானதும் மற்றும் காலத்துக்குக்காலம் விதித்துரைக்கப்படக்கூடியதுமான வேறேதேனும் துறை.

(2) (அ) அமைச்சர், விடயத்துக்கேற்றவாறாக பாராளுமன்றச் சட்டமொன்றினால் தாபிக்கப்பட்ட ஏதேனும் தோதான உயர் தொழில்சார் அல்லது கல்விசார் குழு அல்லது ஏதேனும் பதிவுச் சபையுடனான கலந்தாலோசனையுடன் (1) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ) அல்லது (இ) என்னும் பந்திகளின்கீழ் குறித்துரைக்கப்பட்ட பாராளுமன்றச் சட்டமொன்றினால் தாபிக்கப்பட்ட நிர்மாணத் தொழில் தொடர்பிலான ஏதேனும் உயர்தொழில்சார் குழுவின் உறுப்பினராகவிராத ஆட்களினதும் அல்லது ஏதேனும் பதிவுச் சபையில் பதிவுசெய்யாததாகவுள்ள ஆட்களினதும் அத்துடன் (1) ஆம் உட்பிரிவின் (ஈ) மற்றும் (உ) என்னும் பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட துறைகளைச் சேர்ந்த ஆட்களினதும் பதிவுக்கான கட்டளைக்கற்களை விதித்துரைத்தல் வேண்டும் ;

(ஆ) ஓராம் உட்பிரிவின் (அ), (ஆ) அல்லது (இ) என்னும் பந்திகளில் குறித்துரைக்கப்பட்டவாறாக உயர்தொழிற்சார் குழுவொன்றின் உறுப்பினரொருவராகவுள்ள எவரேனும் ஆள் அல்லது பாராளுமன்ற சட்டமொன்றினால் தாபிக்கப்பட்ட நிர்மாணத் தொழில் தொடர்பிலான அல்லது ஏதேனும் பதிவுச் சபையின் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஆளொருவர் தகைமைபெற்ற ஆளொருவராதல் வேண்டுமென்பதுடன் இப்பிரிவின்கீழ் பதிவுக்கான கட்டளைக்கற்களிலிருந்து விலக்களிக்கப்படுதலும் வேண்டும்.

(3) தகைமைபெற்ற ஆளொருவராக தம்மைப் பதிவு செய்வதற்கு விரும்புகின்ற எவரேனுமாள் அதன் சார்பில் அதிகாரசபைக்கு விண்ணப்பித்தல் வேண்டும். அதிகாரசபை யானது அத்தகைய விண்ணப்பம் கிடைக்கப்பெற்றதன் மீது -

(அ) ஓராம் உட்பிரிவின் (அ), (ஆ) அல்லது (இ) என்னும் பந்திகளில் குறித்துரைக்கப்பட்டவாறாக ஏதேனும் உயர் தொழில்சார் குழுவின் அல்லது பதிவுச்சபையில் உறுப்பினராகவுள்ள ஆளொருவரின் அல்லது அத்தகைய பதிவுச் சபையின் ஆளொருவரின் சார்பில், பாராளுமன்ற சட்டமொன்றினால் தாபிக்கப்பட்ட நிர்மாணத் தொழில் தொடர்பிலான அத்தகைய உயர்தொழில்சார் குழு அல்லது பதிவுச் சபையிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பமொன்றின் விடயத்தில் இச்சட்டத்தின்கீழ் தகைமைபெற்ற ஆளொரு வராக அத்தகைய ஆளைப் பதிவுசெய்தல் வேண்டு மென்பதுடன் அத்த கைய ஆட்களின் பெயர்களைத் தகைமைபெற்ற ஆட் களின் இடாப்பில் உள்ளடக்கப்படச் செய்தலும் வேண்டும்;

(ஆ) ஓராம் உட்பிரிவின் (அ), (ஆ) அல்லது (இ) என்னும் பந்திகளில் குறித்துரைக்கப்பட்டவாறான ஏதேனும் உயர்தொழில்சார் குழுவின் உறுப்பினராகவிராத அல்லது பாராளுமன்ற சட்டமொன்றினால் தாபிக்கப் பட்ட நிர்மாணத் தொழில் தொடர்பிலான ஏதேனும் பதிவுச் சபையின்கீழ் பதிவுசெய்யப்படாதவராகவுள்ள ஆளொருவரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட விண் ணப்பமொன்றின் விடயத்திலும் மற்றும் (1) ஆம் உட்பிரி வின் (ஈ) மற்றும் (உ) என்னும் பந்திகளில் குறித்துரைக் கப்பட்ட கற்கைத்துறைகளைச் சேர்ந்தவரான எவரே னும் ஆளிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட விண் ணப்பமொன்றின் விடயத்திலும் அதன் பரிந்துரை களுக்காக நம்பிக்கைசார் குழுக்களுக்கு அத்தகைய விண்ணப்பத்தை ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

(4) அதிகாரசபையானது (3) ஆம் உட்பிரிவின்கீழ் நம்பிக்கை சார் குழுவினால் அதற்கு ஆக்கப்பட்ட விதப்புரையின் அடிப்படை யின்மீது அவ்வாறு விதித்துரைக்கப்பட்ட ''தகைமைபெற்ற ஆட்களாக'' அத்தகைய ஆட்களை நியமிக்கலாம் என்பதுடன் தகைமைபெற்ற ஆட்களின் இடாப்பில் அத்தகைய ஆட்களின் பெயர்களை உள்ளடக்கச் செய்தலும் வேண்டும்.

(5) தகைமைபெற்ற ஆட்களின் பதிவுக்கான நடவடிக்கை முறை மற்றும் அத்தகைய பதிவின் மீளப்புதுப்பிப்பு என்பன விதித் துரைக்கப்பட்டவாறாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், ஒரு பதிவிலக்கமானது தகைமைபெற்ற ஆட்களின் இடாப்பில் அத்தகைய ஆளின் பெயரைப் பதிவு செய்வதன் மீது அத்தகைய ஒவ்வொரு தகைமைபெற்ற ஆளுக்கும் வழங்கப்படுதலும் வேண்டும். அத்தகைய இடாப்பானது அதிகாரசபையின் அலுவல கத்தில் அலுவலக நேரங்களின் போது எவரேனுமாளினால் கட்டணமின்றிப் பார்வைக்குக் கிடைக்கக்கூடியதாகவிருத்தல் வேண்டும்.

நம்பிக்கைசார் குழுவும் அதன் பணிகளும்.

**27.** (1) அதிகாரசபையானது, பதினைந்துக்கு மேற்படாத உறுப்பினர்களைக் கொண்ட நம்பிக்கைசார் குழுவொன்றை நியமித்தல் வேண்டுமென்பதுடன், இவர்களுள், 26 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) என்னும் பந்தி களில் குறித்துரைக்கப்பட்டவாறாக, இயைபான கல்விசார் மற்றும் உயர்தொழிற்சார் குழுக்கள் மற்றும் பாராளுமன்றச் சட்டமொன்றினால் தாபிக்கப்பட்ட நிர்மாணத் தொழில் தொடர்பிலான ஏதேனும் பதிவுச் சபை மற்றும் 2009 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை கட்டமைப்புசார் எந்திர வியலாளர் சங்க (கூட்டிணைத்தல்) சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை கட்டமைப்புசார் பொறியியலாளர் சங்கம் ஒவ்வொன் றிலுமிருந்து இருவர் பெயர்குறித்து நியமிக்கப்படுதலும் வேண்டும்.

(2) அத்தகைய நம்பிக்கைசார் குழுக்களின் பணியானது இச்சட்டத்தின்கீழ் தகைமைபெற்ற ஆட்கள் உள்ளடங்கலாக நிர்மாணத் தொழில் மனிதவலுவின் பதிவுக்காக தேவைப் படுத்தப்பட்ட உயர்தொழில்சார் மற்றும் வாழ்க்கைத் தொழில்சார் கற்கை நெறிகள், ஆகக் குறைந்த தகைமைகள் மற்றும் அனு பவத்தை, அத்தகைய கற்கைநெறிகளை நடைமுறைப்படுத்தும் முறையை அடையாளம் காணுதல் மற்றும் வகுதிப்படுத்துதல் மற்றும் இச்சட்டத்தின்கீழ் தகைமைபெற்ற ஆட்களை பதிவு செய்யப்படவேண்டிய ஆட்களை அதிகாரசபைக்கு விதந்துரைத் தல் என்பனவாதல் வேண்டும்.

தகைமைபெற்ற ஆட்கள் மட்டுமே அடையாளம் காணப்பட்ட நிர்மாணக் கட்டுமான வேலையில் ஈடுபடுதல்.

**28.** தகைமை பெற்ற ஆளொருவர் தவிர்ந்த வேறெவரேனு மாள், ஏதேனும் அடையாளம் காணப்பட்ட நிர்மாண வேலை களின் தேவைப்படுத்தப்பட்ட ஒப்பந்த ஆவணப்படுத்தலில் மற்றும் மேற்பார்வை செய்தலில் அல்லது நிறைவேற்றுதலில், வடிவமைத்தலில் மற்றும் தயாரித்தலில் ஈடுபடுவதற்காக அல்லது அந்த நோக்கத்துக்காக அல்லது நியமிக்கப்படுதல் ஆகாது.

பதிவேடுகள் பேணப்படுதல்.

**29.** அதிகாரசபையானது அடையாளங் காணப்பட்ட நிர்மாண சேவைகள் பற்றிய பதிவேடுகளைப் பேணுதல் வேண்டும்.

தகைமைபெற்ற ஆட்கள் நியமங்களுக்கு இணங்கி யொழுகுதல்.

**30.** தகைமைபெற்ற ஒவ்வோராளும் உரிய குழுவினால் அல்லது பதிவுச் சபையினால் அல்லது ஒழுங்கமைப்பினால் பேணப்பட்ட வடிவமைப்பு மற்றும் ஆவணப்படுத்துதலின் நியமங்களுக்கு இணங்கியொழுகுதல் வேண்டுமென்பதுடன், ஏதேனும் குழுவினால் அல்லது பதிவுச் சபையினால் அல்லது ஒழுங்கமைப்பினால் அத்தகைய நியமங்கள் பேணப்படாத விடத்து, அத்தகைய குழுவின் அல்லது ஒழுங்கமைப்பின் உறுப்பினர்களாகவுள்ள தகைமைபெற்ற ஆட்கள் அல்லது ஏதேனும் பதிவுச்சபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஆட்கள், அடையாளம் காணப்பட்ட நிர்மாண வேலைகள் தொடர்பில் காலத்துக்குக் காலம் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அதிகார சபையின் நியமங்களுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

அடையாளம் காணப்பட்ட நிர்மாணப் பணிகளுக்கான உள்ளூராட்சி அதிகாரசபையின் அங்கீகாரம்.

**31.** வேறேதேனும் சட்டத்தில் அடங்கியுள்ளவை எது எவ்வாறிருப்பினும், உள்ளூராட்சி அதிகாரசபையெதுவும் அத்தகைய நிர்மாணம் தொடர்பில் கட்டிடக் கலை, கட்டமைப்பு, மின்னியல் மற்றும் நீர்வழங்கல், வேறு வடிவமைப்புகள் மற்றும் சேவைகள் தகைமைபெற்ற ஆளொருவரினால் நிறைவேற்றப்பட்டு இருந்தாலன்றி, ஏதேனும் அடையாளம் காணப்பட்ட நிர்மாண வேலைகளுக்கான கட்டிட அங்கீகாரத்துக்கான ஏதேனும் விண்ணப்பத்தை ஏற்றுக் கவனித்தல் ஆகாது.

தகைமைபெற்ற ஆட்களுக் கெதிரான நுண்ணாய்வுகளை நடாத்துதல்.

**32.** (1) தகைமைபெற்ற எவரேனுமாளுக்கெதிரான -

(அ) உயர்தொழிற்சார் அசட்டையீனம், தகுதியின்மை அல்லது ஒழுக்க மற்றும் சமூக நியமங்களின் மீறுகை ;

(ஆ) ஒழுக்கக்கேடு, துர்ப்பழக்கம், மோசடி அல்லது நேர்மையீனம் ;

(இ) அவரது பதிவு எவையேனும் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாக வழங்கப்பட்டிருக்குமிடத்து, எவையேனும் நியதிகளின் மற்றும் நிபந்தனைகளின் மீறுகை,

தொடர்பிலான ஏதேனும் முறைப்பாடு அதிகாரசபைக்குச் செய்யப்படலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் எந்தத் தகைமைபெற்ற ஆளுக்கெதிராக முறைப்பாடு செய்யப்படுகின்றதோ அந்தத் தகைமைபெற்ற ஆள், 26 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ) அல்லது (இ) என்னும் பந்திகளிற் குறித்துரைக்கப்பட்ட உயர்தொழிற்சார் குழுவின் எவரேனும் உறுப்பினராகவிருக்குமிடத்து அல்லது பாராளுமன்றச் சட்டமொன்றினால் தாபிக்கப்பட்ட நிர்மாணத் தொழில் தொடர்பான ஏதேனும்

பதிவுச் சபையின் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஆளொருவராக விருக்குமிடத்து, அதிகாரசபையானது, அத்தகைய முறைப் பாட்டை இயைபான உயர்தொழிற்சார் குழுவுக்கு அல்லது பாராளு மன்றச் சட்டமொன்றினால் தாபிக்கப்பட்ட நிர்மாணத் தொழி லிலுள்ள ஏதேனும் பதிவுச் சபைக்கு ஆற்றப்படுத்துதல் வேண்டும்.

(3) இயைபான உயர்தொழில்சார் குழுவினால் அல்லது பாராளுமன்றச் சட்டமொன்றினால் தாபிக்கப்பட்ட நிர்மாணத் தொழிலிலுள்ள ஏதேனும் பதிவுச் சபையினால் முறைப் பாடொன்று கிடைக்கப்பெற்றதன் மீது இரண்டாம் உட்பிரிவின்கீழ் அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட கருமங்கள் தொடர்பில் நுண் ணாய்வொன்றை நிறைவேற்றுதல் வேண்டும். இயலுமான அளவு விரைவாக அவை தொடர்பான முடிபுகள் அதிகாரசபைக்கு அனுப்பப்படுதல் வேண்டுமென்பதுடன், அவசியமான ஒழுக் காற்று நடவடிக்கை எடுத்தலும், அதிகாரசபைக்கு மீள் அறிக்கை யிடுதலும் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் இயைபான உயர்தொழில்சார் குழுவினால் அல்லது பாராளுமன்றச் சட்டமொன்றினால் தாபிக்கப்பட்ட நிர்மாணத் தொழில் தொடர்பான ஏதேனும் பதிவுச் சபையினால் விதப்புரை எதுவும் செய்யப்படாதவிடத்து அதிகார சபையானது அத்தகைய கருமத்தை நுண்ணாய்வு செய்தல் வேண்டுமென்பதுடன், அவசியமான நடவடிக்கையை எடுத்தலும் வேண்டும்.

(5) ஏதேனும் உயர்தொழில்சார் குழுவின் உறுப்பினராகவிராத அல்லது பாராளுமன்றச் சட்டமொன்றினால் தாபிக்கப்பட்ட நிர்மாணத் தொழில் தொடர்பான ஏதேனும் பதிவுச் சபையின் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஆளொருவராகவிராத ஆளுக்கு எதிரான ஏதேனும் முறைப்பாடானது விதித்துரைக்கப்பட்டவாறான அதிகாரசபையின் ஒழுக்காற்று நடவடிக்கை முறைக்கு இணங்க அதிகாரசபையால் நுண்ணாய்வு செய்யப்படுதல் வேண்டும்.

வெளிநாட்டு ஆலோசகர்களை ஈடுபடுத்துதல்.

**33.** (1) இலங்கையில் ஏதேனும் அடையாளம் காணப்பட்ட நிர்மாண வேலையில் தகைமைபெற்ற ஆளொருவராக வெளி நாட்டு ஆலோசகரொருவரை ஈடுபடுத்துவதற்குத் தேவைப் படுத்தப்படுகின்ற எவரேனுமாள் பகுதியளவிலான பதிவொன் றுக்காக அதிகார சபைக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

(2) வெளிநாட்டு ஆலோசகர் ஒவ்வொருவரும் இலங்கையில் தகைமைபெற்ற ஆளொருவராக ஏதேனும் அத்தகைய ஆலோசனைப் பணியில் ஈடுபடுத்தப்படுவதற்கு முன்னதாக தகைமைபெற்ற ஆளொருவராக பகுதியளவிலான பதிவொன் றிற்காக அதிகாரசபைக்கு விண்ணப்பித்தல் வேண்டும் என் பதுடன், அப்பதிவானது அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டமொன் றுடன் இணைந்துள்ளதென்ற அப்பதிவுக்கான நிபந்தனையின் மீது வருடாந்த மீளப் புதுப்பித்தலுக்கமைவாக இருத்தலும் வேண்டும். அத்தகைய பதிவுக்கான நடவடிக்கை முறையானது விதித்துரைக்கப்பட்டவாறிருத்தல் வேண்டும்.

(3) அதிகாரசபையினால் வழங்கப்பட்ட பதிவுச் சான்றித ழொன்றைப் பெறாமல் ஏதேனும் அடையாளம் காணப்பட்ட நிர்மாண வேலையை நிறைவேற்றுவதற்கு தகைமைபெற்ற ஆளொருவராகச் செயற்படுகின்ற எவரேனுமாள் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் ஏற்பாடுகள் இலங்கை அரசாங்கத்தின் ஏதேனும் கருத்திட்டத்தின்கீழ் ஏதேனும் நிர்மாண வேலையில் ஈடுபடுகின்ற எவரேனும் வெளிநாட்டு ஆலோசகருக்கு ஏற்புடைய தாதலாகாது. எவ்வாறாயினும், அதிகாரசபையானது இச் சட்டத்தின் 55 ஆம் பிரிவின் நோக்கத்துக்காக தேவைப்படுத்தப் பட்டவாறான ஏதேனும் விவரங்களை அத்தகைய வெளிநாட்டு ஆலோசகர்களை தொழிலுக்கமர்த்தும் நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன், இப்பிரிவின்கீழ் அதிகார சபையால் ஆக்கப்பட்ட ஏதேனும் வேண்டுகோளுடன் அத்தகைய நிறுவனங்கள் இணங்கியொழுகுதலும் வேண்டும்.

## பாகம் VI

### ஒப்பந்தக்காரர்கள் ஆதன அபிவிருத்தியாளர்கள் மற்றும் முதலியோரின் பதிவு

*ஒப்பந்தக் காரர்கள் பற்றிய இடாப்பு.*

**34.** (இதனகத்துப்பின்னர் "ஒப்பந்தக்காரர்கள் பற்றிய இடாப்பு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அதிகாரசபையானது அதனால் அதன் சார்பில் அதிகாரசபையில் தீர்மானிக்கப் பட்டவாறான முறையிலும் வடிவத்திலும் ஒப்பந்தக்காரர்களின் இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும். இது அதிகாரசபையின் அலுவலகத்தில் அலுவலக நேரத்தின்போது எவரேனும் ஆளினால் கட்டணமின்றிப் பார்வைக்குக் கிடைக்கக்கூடியதாகவிருத்தல் வேண்டும்.

*ஒப்பந்தக் காரர்களின் பதிவுக்கான நடவடிக்கை முறையும் பதிவைப் புதுப்பித்தலும்.*

**35.** (1) ஒப்பந்தக்காரரொருவராகப் பதிவுசெய்யப்படுவதற் கான விண்ணப்பமொன்று அதிகாரசபைக்குச் செய்யப்படுதல் வேண்டும். பதிவுசெய்தல் முறை மற்றும் அதற்கான கட்டணங்கள் விதித்துரைக்கப்பட்ட வாறாக இருத்தல் வேண்டும்.

(2) அதிகாரசபையானது, இயைபான உயர்தொழில்சார் குழுக்களுடனும் ஒப்பந்தக்காரர் கழகங்களுடனுமான கலந் தாலோசனையுடன், ஒப்பந்தக்காரர்களாக ஆட்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களைக் கவனத்திற்கொள்வதற்கென குழுவொன்றை நியமித்தல் வேண்டும். அத்தகைய பதிவுக்கான கட்டளைக்கற்கள் விதித்துரைக்கப்பட்டவாறாதல் வேண்டுமென் பதுடன், தேசியப் பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்துடன் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களின் ஆற்றல்களுக்கு இடமளிக்கும் பொருட்டு வினைத்திறனுடைய செலவுள்ள புத்தாக்க தொழில்நுட்பங்கள் தொடர்பில் குறிப்பான ஏற்பாடுகளையும் உள்ளடக்குதல் வேண்டும்.

(3) ஒப்பந்தக்காரரொருவராக எவரேனுமாளை பதிவு செய்யு மிடத்து அதிகாரசபையானது அத்தகைய ஆளுக்கு, பதிவிலக்க மொன்றையும் மற்றும் பதிவுச்சான்றிதழொன்றையும் வழங்குதல் வேண்டும்.

(4) இப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட பதிவுச்சான்றிதழ் அத்தகைய சான்றிதழ் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குச் செல்லுபடியாதல் வேண்டுமென்பதுடன், அதற்கெனச் செய்யப்படும் விண்ணப்பத்தின் மீதும், விதித்துரைக்கப்பட்ட புதுப்பித்தற் கட்டணக் கொடுப்பனவின்மீதும் புதுப்பிக்கப்படலாம்.

ஒப்பந்தக் காரரொருவரின் பதிவை இடைநிறுத்தல் அல்லது இல்லாதாக்குதல்.

**36.** (1) அதிகாரசபையானது, ஒப்பந்தக்காரரொருவருக்கெதிரான ஏதேனும் முறைப்பாட்டைப் பெற்றுக்கொள்ளுமிடத்து, அமைச்சரால் நியமிக்கப்பட்ட முக்கியமான ஆட்களை உள்ளடக்கியதான ஒழுக்காற்றுக் குழுவொன்றுக்கு அத்தகைய முறைப்பாட்டை ஆற்றுப்படுத்துதல் வேண்டும் என்பதுடன், அது விசாரணை செய்தலும் அதிகாரசபைக்கு அது தொடர்பில் விதப்புரைகளை ஆக்குதலும் வேண்டும். ஒழுக்காற்று நடவடிக்கை முறைக்கான வழிகாட்டுநெறிகள் விதித்துரைக்கப்பட்டவாறாதல் வேண்டும்.

(2) இப்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட ஒழுக்காற்றுக் குழுவானது அதிகாரசபைக்கு அதன் விதப்புரைகளைச் செய்வதில் பின்வரும் விடயங்களைக் கவனத்தில் எடுத்தல் வேண்டும் :-

(அ) எவ்வொப்பந்தக்காரருக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதோ அந்த ஒப்பந்தக்காரர் ஏதேனும் உயர் தொழில்சார் கவனயீனம், தகுதியின்மை, ஒழுக்கக்கேடு, துர்ப்பழக்கம், மோசடி அல்லது நேர்மையீனம் என்பவற்றிற்குக் குற்றவாளியாகக் காணப்பட்டிருத்தலை ;

(ஆ) எவ்வொப்பந்தக்காரருக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதோ அந்த ஒப்பந்தக்காரர் ஒப்பந்தக்காரரொருவராக தனது ஒப்பந்தத்துக்குரிய கடப்பாடுகளை மீறியிருப்பதை ;

(இ) எவ்வொப்பந்தக்காரருக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதோ அவ்வொப்பந்தக்காரர் அவரது

பதிவுச்சான்றிதழ் எவையேனும் நியதிகள் நிபந்தனைகளுக்கமைவாக வழங்கப்பட்டுள்ளவிடத்து, அந்நியதிகள் நிபந்தனைகளை மீறியிருப்பதை ;

(ஈ) எவ்வொப்பந்தக்காரருக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதோ அவ்வொப்பந்தக்காரர் மோசடி மூலம் அல்லது பிறழ் பிரதிநிதித்துவம் மூலம் ஒப்பந்தக்காரரொருவாகப் பதிவைப் பெற்றிருப்பதை ; அல்லது

(உ) எவ்வொப்பந்தக்காரருக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதோ அவ்வொப்பந்தக்காரர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளை அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை மீறியுள்ளவராகவிருப்பதை அல்லது அவற்றுக்கு இணங்கியொழுகத் தவறியுள்ளவராகவிருப்பதை.

(3) அதிகாரசபையானது இப்பிரிவின்கீழ் ஒழுக்காற்றுக் குழுவினால் செய்யப்பட்ட அத்தகைய விதப்புரைகளைப் பெற்றுக் கொண்டதன் மீது இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழ் ஒன்றை இடைநிறுத்தலாம் அல்லது இல்லாதாக்கலாம்.

ஒப்பந்தக்காரரொருவர் முதலியோரின் பதிவை மறுத்தலுக்கெதிரான மேன்முறையீடுகள்.

**37.** (அ) இச்சட்டத்தின்கீழ் எவரேனும் ஒப்பந்தக்காரரை பதிவு செய்வதற்கு மறுத்தலால் ; அல்லது

(ஆ) எவரேனும் ஒப்பபந்தக்காரருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் பதிவுச் சான்றிதழைப் புதுப்பித்தலை மறுத்தலால் ; அல்லது

(இ) இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழொன்றினை இடைநிறுத்துவதால் அல்லது இல்லாதாக்குவதால்,

இன்னலுற்றவரான ஆளொருவர், அத்தகைய மறுப்புக்கு, இடைநிறுத்தலுக்கு அல்லது இல்லாதாக்குதலுக்கு எதிராக 53 ஆம் பிரிவினால் தாபிக்கப்பட்ட மேன்முறையீட்டுச் சபைக்கு விடயத்திற்கேற்ப அத்தகைய மறுப்பு, இடைநிறுத்தம் அல்லது இல்லாதாக்குதல் அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் மேன்முறையீடு செய்யலாம்.

அடையாளம் காணப்பட்ட நிர்மாண பணிகளில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக் காரர்களைத் தொழிலுக் கமர்த்தல்.

**38.** (1) அடையாளம் காணப்பட்ட நிர்மாண வேலை ஒவ்வொன்றும் அத்தகைய நோக்கத்துக்காக விதித்துரைக்கப்படக் கூடியவாறான நடவடிக்கை முறைகள் மற்றும் நியமங்களுக்கிணங்க பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரொருவரினால் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(2) அதிகாரசபையால் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழொன்றைப் பெற்றுக்கொள்ளாமல் ஏதேனும் அடையாளம் காணப்பட்ட நிர்மாண வேலைகளை நிறைவேற்றுகின்றவரான அல்லது நிறைவேற்றுவதனைப் பொறுப்பேற்கின்றவரான எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

வெளிநாட்டு ஒப்பந்தக் காரர்களைப் பதிவு செய்தல் மற்றும் தொழிலுக் கமர்த்துதல்.

**39.** (1) வெளிநாட்டு ஒப்பந்தக்காரர் ஒவ்வொருவரும் இலங்கையில் ஏதேனும் அடையாளம் காணப்பட்ட நிர்மாணத் தொழிலில் ஈடுபடுவதற்கு முன்னர் ஒப்பந்தக்காரரொருவராகத் தற்காலிகப் பதிவொன்றைப் பெறுதல் வேண்டும். பதிவுக்கான நடவடிக்கைமுறை மற்றும் அத்தகைய பதிவைப் புதுப்பித்தலுக்கான நடவடிக்கைமுறை என்பன விதித்துரைக்கப்பட்டவாறாக விருத்தல் வேண்டும்.

(2) ஆளெவரும் ஏதேனும் அடையாளம் காணப்பட்ட நிர்மாணத் தொழிலில், இப்பிரிவின்கீழ் அதிகாரசபையுடன் அத்தகைய ஒப்பந்தக்காரர் பதிவுசெய்யப்பட்டிருந்தாலன்றி, வெளிநாட்டு ஒப்பந்தக்காரரொருவரை ஈடுபடுத்துதல் ஆகாது.

(3) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள் ஏதேனும் அடையாளங் காணப்பட்ட நிர்மாண வேலையில் ஈடுபடுவதற்கு இலங்கை அரசாங்கத்துடன் உடன்படிக்கையொன்றைச் செய்துகொண்டுள்ள வெளிநாட்டு ஒப்பந்தக்காரரொருவருக்கு ஏற்புடையதாதலாகாது. எவ்வாறாயினும், அதிகாரசபையானது இச்சட்டத்தின் 55 ஆம் பிரிவின் நோக்கத்துக்காக தேவைப்படக்

கூடியவாறான ஏதேனும் விபரங்களை அத்தகைய வெளிநாட்டு ஒப்பந்தக்காரர்களைத் தொழிலிலமர்த்துகின்ற நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன், அத்தகைய நிறுவனங்கள் இப்பிரிவின்கீழ் அதிகாரசபையால் செய்யப்பட்ட ஏதேனும் வேண்டுகோளுடன் இணங்கியொழுகுதலும் வேண்டும்.

ஒப்பந்தக் காரர்களைக் கண்காணித்தல்.

**40.** அதிகாரசபையானது, அதிகாரசபையால் அதன் சார்பில் ஆக்கப்பட்ட விதிகளின்மூலம் இச்சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப் பட்ட ஒப்பந்தக்காரர்களின் கண்காணிப்புக்கான கண்காணிப்பு முறைமையொன்றைத் தாபித்தல் வேண்டும்.

ஆதன அபிவிருத்தி யாளர்கள் பற்றிய இடாப்பு.

**41.** அதிகாரசபையானது, ஆதன அபிவிருத்தியாளர்கள் பற்றிய இடாப்பொன்றை பேணுதல் வேண்டும் ; அது அதிகார சபையின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களின்போது எவரேனும் ஆளி னால் கட்டணமின்றிப் பார்வையிடப்படுவதற்குக் கிடைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

ஆதன அபிவிருத்தி யாளர்களின் பதிவுக்கான நடவடிக்கை முறையும் பதிவினைப் புதுப்பித்தலும்.

**42.** (1) அபிவிருத்தியாளரொருவராக பதிவு செய்வதற்கான விண்ணப்பமொன்று அதிகாரசபைக்குச் செய்யப்படுதல் வேண்டும். பதிவு செய்தல் முறை மற்றும் அதற்கான கட்டணம் விதித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

(2) அதிகாரசபையானது இயைபான உயர்தொழில்சார் குழுக்கள் மற்றும் ஆதனம் அபிவிருத்தியாளர் கழகங்களுடனான கலந்தாலோசனையுடன் ஆதன அபிவிருத்தியாளர்களான ஆட்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களைக் கருத்தில் கொள்வதற்கென குழுவொன்றை நியமித்தல் வேண்டும். அத்தகைய பதிவுக்கான கட்டளைக்கற்கள் விதித்துரைக்கப் பட்டவாறானவையாகவிருத்தல் வேண்டும்.

நிர்மாணப் பொருட்கள் மற்றும் ஆக்கக் கூறுகளின் இறக்குமதி யாளர்கள், உற்பத்தியாளர் கள் மற்றும் வழங்குநர்கள் பற்றிய விபரக்கொத்து.

**43.** அதிகாரசபையானது அதனால் ஆக்கப்பட்ட விதிகளின் மூலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான முறையில் நிர்மாணப் பொருட்கள் மற்றும் நிர்மாண ஆக்கக்கூறுகளின் இறக்குமதி யாளர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் வழங்குநர்கள் பற்றிய விபரக்கொத்தொன்றைப் பேணுதலும் வேண்டும்; அத்தகைய விபரக்கொத்தானது அதிகாரசபையின் அலுவலகத்தில் எவ ரேனும் ஆளினால் அலுவலக நேரங்களின்போது கட்டணமின்றிப் பார்வையிடுவதற்கு கிடைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

பாரமான நிர்மாண எந்திரத் தொகுதி மற்றும் சாதனங்கள் பற்றிய விபரக்கொத்து.

**44.** அதிகாரசபையானது அதனால் ஆக்கப்பட்ட விதிகளின் மூலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான முறையில் கிடைக்கக்கூடியதாகவிருக்கின்ற குறித்துரைக்கப்பட்ட பாரமான நிர்மாண எந்திரத்தொகுதி மற்றும் சாதனங்களின் விபரக்கொத்தொன்றைப் பேணுதல் வேண்டும். அத்தகைய விபரக்கொத்தானது அதிகாரசபையின் அலுவலகத்தின் அலுவலக நேரங்களின்போது எவரேனும் ஆளினால் கட்டணமின்றிப் பார்வையிடுவதற்குக் கிடைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

## பாகம் VII

### தொழினுட்பக் கணக்காய்வு

தொழினுட்பக் கணக்காய்வு.

**45.** (1) அதிகாரசபையானது அத்தகைய நிர்மாணத் தொழிலின் சொந்தக்காரரினால் அல்லது ஏதேனும் அரசாங்க ஒழுங்கமைப்பினால் அவ்வாறு செய்யப்படுவதற்கு தேவைப் படுத்தப்பட்ட ஏதேனும் அடையாளம் காணப்பட்ட நிர்மாணத் தொழிலின் தொழினுட்பக் கணக்காய்வை நிறைவேற்றுதல் வேண்டும்.

(2) அத்தகைய தொழினுட்பக் கணக்காய்வு செய்தல் தொடர்பில் அறவீட்டுக் கட்டணத்துக்கான நடவடிக்கைமுறை மற்றும் வீதங்கள் விதித்துரைக்கப்பட்டவாறானதாவிருத்தல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக “தொழினுட்பக் கணக்காய்வு” என்பது நிர்மாண நடைமுறையும் மற்றும் முகாமைத்துவ நடைமுறையையும் அதேபோன்று இறுதிவிளைவையும் மற்றும் ஒப்பந்த ஆவணங்களின் பரிசோதனையையும் மற்றும் ஒப்பந்தங்கள்மீது செய்யப்படுவதற்கு தேவைப்படுத்தப்பட்ட கொடுப்பனவுகளுக்கான ஆவணங்களின் பரிசோதனையையும் உள்ளடக்கியதும் பின்வருவனவற்றை உறுதிசெய்யும்பொருட்டு அடையாளம் காணப்பட்ட நிர்மாண வேலைகளைச் சோதனை செய்தல் என்று பொருள்படும் :-

(அ) இச்சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கிணங்க தயாரிக்கப் பட்ட அடையாளம் காணப்பட்ட நிர்மாண வேலைகள் தொடர்பான ஆவணப்படுத்துகைக்கு இணங்கியொழுகுவதை ;

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடனும் ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளுடனும் இசைந்தொழுகுமாறு அடையாளம் காணப்பட்ட நிர்மாண வேலைகளின் நிறைவேற்று தலை;

(இ) ஒப்பந்தத்தில் குறிப்பீடுசெய்யப்பட்ட திறத்தவர்களி னால் ஒப்பந்தத்தின்கீழான அவர்களுடைய முறையான கடப்பாடுகளுடன் இணங்கியொழுகுதலை ; அத்துடன்

(ஈ) வினைத்திறனான மூலவளங்கள் மற்றும் வலுப் பயன்பாட்டு நியமங்கள் உள்ளடங்கலாக அடிப்படைப் பொதுச் சுகாதாரம், தொழிற்சார் சுகாதாரம் மற்றும் சூழல்சார் நியமங்கள் மற்றும் தொழினுட்ப நியமங் களுடன் இணங்கியொழுகுதலை.

(4) அதிகாரசபையானது தொழினுட்பக் கணக்காய்வு செய்தலை நிறைவேற்றும் நோக்கத்துக்காக தர முகாமைத்துவக் கணக்காய் வாளர்களைப் பதிவுசெய்தலும் அவர்களின் இடாப்பொன்றைப் பேணுதலும் வேண்டும். பதிவுக்கான நடவடிக்கைமுறை மற்றும் அத்தகைய கணக்காய்வாளர்களுக்குத் தேவைப்படுத்தப்பட்ட தகைமைகள் என்பன அதிகாரசபையினால் ஆக்கப்பட்ட விதி களின்மூலம் தீர்மானிக்கப்பட்டவாறானதாதல் வேண்டும்.

## பாகம் VIII

### நியம ஆவணங்களும் மனிதவள அபிவிருத்தியும்

*அதிகார சபையினால் குறித்துரைக் கப்பட்ட நியம ஆவணங்கள் பயன்படுத்தப் படுதல் வேண்டும்.*

**46.** அடையாளங்காணப்பட்ட நிர்மாணக் கட்டுமான வேலை யொன்றுக்காக ஆலோசகரொருவராக அல்லது பதிவுசெய்யப் பட்ட ஒப்பந்தக்காரரொருவராகத் தகைமைபெற்ற ஆளொருவரை ஈடுபடுத்துகின்ற எவரேனும் திறத்தவர், அதிகாரசபையினால் அந்நோக்கத்திற்கென குறித்துரைக்கப்பட்ட நியம ஆவணங்களைப் பயன்படுத்துதல் வேண்டும்.

*மனிதவள அபிவிருத்தி.*

**47.** அதிகாரசபையானது -

(அ) பயிற்சியூடாக தகைமைபெற்ற நிர்மாண ஆளணியினருக்கான எதிர்காலத் தேவையை ஈடுசெய்வதற்கான மூலோபாயங்களை அபிவிருத்தி செய்தல் வேண்டும் ;

(ஆ) தரத்தை மற்றும் உற்பத்தித்திறனைச் சீராக்குவதற்கான பயிற்சியை நடாத்துதலை வசதிப்படுத்துதல் அல்லது நடாத்துதல் வேண்டும் ;

(இ) திறமைகள் மற்றும் தேசிய தொழிற்பரீட்சைகள் மீதான தேசிய நியமங்களின் அபிவிருத்தியை வசதிப்படுத்துதல் வேண்டும் ;

(ஈ) புதிதாக உருவாகின்ற தொழில்களுக்கான பாடவிதானத்தின் அபிவிருத்தியை வசதிப்படுத்துதல் வேண்டும்;

(உ) நிர்மாணப் பயிற்சி தொடர்பான தகவல் பரிமாற்றத்துக்கான திட்டமொன்றைத் தாபித்தல் வேண்டும் ;

(ஊ) பயிற்சி, மனிதவலுத் தேவைகள் மற்றும் தொடர்புபட்ட கருமங்கள் என்பன தொடர்பான ஆய்வுகளை நடாத்துதல் வேண்டும் ;

(எ) நிர்மாண ஆளணியினருக்கான சமூக ஏற்றங்கீகாரத்தையும் அவர்களின் தரத்தையும் சீராக்குவதனை வசதிப்படுத்துதல் வேண்டும் ;

(ஏ) நிர்மாணத் தொழிலின் மனிதவளத் தேவைப்பாடுகளை அதிகரிப்பதற்கு நிர்மாண ஆளணியினருக்கான ஒரு செய்தொழில் மார்க்கத்தின் அபிவிருத்தியை வசதிப்படுத்துதல் வேண்டும் ;

(ஐ) தகைமைபெற்ற ஆட்களைச் சம்பந்தப்படுத்தாமல் வாடிக்கையாளர்களுடன் தனிப்பட்ட ஒப்பந்தத்தைச் செய்துகொள்கின்ற உரிமம்பெற்ற கைவினைஞர்களுக்கும் சிறிய அளவிலான ஒப்பந்தக்காரர்களுக்கும் ஆதரவளிப்பதற்கு ஒப்பந்த ஆவணங்களையும், நடைமுறைப்படுத்துகின்ற மூலோபாயங்களையும் அபிவிருத்தி செய்தல் வேண்டும் ; அத்துடன்

(ஒ) ஒப்பந்த ஆவணப்படுத்துகையின் சிங்கள, தமிழ் மொழி பெயர்ப்புகளுக்கு வசதியளித்தல் வேண்டும்.

*திறமையான ஆட்கள்.*

**48.** (1) காலத்துக்குக்காலம் அதிகாரசபையால் ஆக்கப்பட்ட விதிகளின்மூலம் தீர்மானிக்கப்பட்டவாறான ஏதேனும் கைவினைகளில் ஏதேனும் திறமையைக்கொண்டுள்ள எவரேனுமாள், அடையாள அட்டையொன்றின் வழங்குதலிற்காக அதிகாரசபைக்கு விண்ணப்பிக்கலாம்.

(2) அதிகாரசபையானது அத்தகைய ஆளுக்கு (இதனகத்துப் பின்னர் ''கைவினை அடையாள அட்டை'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) அதனால் ஆக்கப்பட்ட விதிகளின்மூலம் தீர்மானிக்கப்பட்ட படிவத்திலும் முறையிலும் அத்தகைய கைவினை அடையாள அட்டையை வைத்திருப்பவரின் வகுதியையும் தரத்தையும் குறித்துரைக்கின்ற அடையாள இலக்கமொன்றுடன்கூடிய அடையாள அட்டையை அத்தகைய விண்ணப்பதாரரின் தகுதி மற்றும் ஆற்றலைக் கருத்திற்கொண்டு வழங்கலாம்.

(3) கைவினை அடையாள அட்டையொன்றை வைத்திருப்பவரைத் தவிர்ந்த எவரேனுமாள் இயைபான கைவினையின்மீது கைவினை அடையாள அட்டையொன்றை வைத்திருப்பவரின் மேற்பார்வையின் கீழன்றி, ஏதேனும் அடையாளம் காணப்பட்ட நிர்மாண சேவையில் சுதந்திரமாக ஈடுபடுத்தப்படுதல் ஆகாது.

(4) வேறெவரேனுமாளுக்கு மோசடியான அல்லது போலியான கைவினை அடையாள அட்டையை சமர்ப்பிக்கின்ற அல்லது அத்தகைய மோசடியான அல்லது போலியான கைவினை அடையாள அட்டையை அல்லது அதைப்போன்ற ஆவணத்தை உடைமையில் வைத்திருக்கின்ற எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(5) எவரேனும் கைவினை அடையாள அட்டையை வைத்திருப்பவர் விடயத்துக்கேற்ப ''பதிவுசெய்யப்பட்ட கைவினைஞர்'' அல்லது ''பதிவுசெய்யப்பட்ட தலைமைக் கைவினைஞர்'' என்ற விவரணத்தைத்தாங்கிய பலகையொன்றை அவருடைய வேலை செய்யும் இடத்தில் துலாம்பரமாக வெளிக்காட்டுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(6) கைவினை அடையாள அட்டைகளை வழங்குவதுடன் தொடர்புடைய நிபந்தனைகள் மற்றும் அத்தகைய கைவினை அடையாள அட்டை வைத்திருப்பவர்களுக்கான நடத்தைக் கோவையானது விதித்துரைக்கப்பட்டவாறானதாகவிருத்தல் வேண்டும்.

(7) அதிகாரசபையானது, ஏதேனும் தேவைப்படுத்தப்பட்ட இடப்பரப்பில் தேவைப்படுத்தப்பட்ட திறமைகள் உள்நாட்டில் கிடைக்கக்கூடியனவாகவிருப்பின், ஏதேனும் அடையாளம் காணப்பட்ட நிர்மாண வேலையில் எவரேனும் வெளிநாட்டுக் கைவினைஞர்களை ஈடுபடுத்துவதற்கான அங்கீகாரத்தை வழங்குதலாகாது.

(8) அதிகாரசபையானது இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட கைவினைஞர்களுக்காக, அபிவிருத்தி நிதியத்தைப் பயன்படுத்தி ஏதேனும் நீண்டகாலக் காப்புறுதிப்பூட்கையை அல்லது ஏதேனும் ஓய்வூதியத் திட்டத்தை அமைச்சரவையின் அங்கீகாரத்துக்கமைவாக ஒழுங்கேற்பாடு செய்யலாம்.

(9) அதிகாரசபையானது அதனால் ஆக்கப்பட்ட விதிகளின் மூலம் தீர்மானிக்கப்படவேண்டியவாறான படிவத்திலும் முறையிலும் கைவினை அடையாள அட்டை வைத்திருப்பவர்களின் இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும். அத்தகைய இடாப்பானது அதிகாரசபையின் அலுவலகத்தில் கட்டணமெதுவுமின்றி பார்வையிடுவதற்காக கிடைக்கக்கூடியாகவிருத்தல் வேண்டும்.

நிர்மாணத் தொழிலில் தேர்ச்சிபெற்ற நிர்மாண வேலையாளர்கள், நிர்மாண அமைவிட மேற்பார்வையாளர்கள் நடுத்தர மட்டத் தொழினுட்ப அலுவலர்கள் மற்றும் வேறு உயர்தொழிலர்கள் என்பவர்களைப் பதிவுசெய்தல்.

**49.** (1) அதிகாரசபையானது விதித்துரைக்கப்படக்கூடியவாறாக நிர்மாணத் தொழிலில் தேர்ச்சிபெற்ற நிர்மாண வேலையாளர்கள், நிர்மாண அமைவிட மேற்பார்வையாளர்கள், நடுத்தர மட்டத் தொழினுட்ப அலுவலர்கள் மற்றும் வேறு உயர் தொழிலர்கள் பற்றிய இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டு மென்பதுடன் அது அதிகாரசபையின் அலுவலகத்தில் கட்டணமின்றிப் பார்வையிடுவதற்காக கிடைக்கக்கூடியவாறிருத்தலும் வேண்டும்.

(2) நிர்மாணத் தொழிலில் தேர்ச்சிபெற்ற நிர்மாண வேலையாளர்கள், நிர்மாண அமைவிட மேற்பார்வையாளர்கள், நடுத்தரமட்டத் தொழினுட்ப அலுவலர்கள் மற்றும் வேறு உயர் தொழிலர்கள் என்போரின் பதிவானது, வெவ்வேறு திறமைகள் மற்றும் தகைமைகளுக்கிணங்கச் செய்யப்படுதல் வேண்டு மென்பதுடன், பதிவுக்கான நடவடிக்கைமுறை மற்றும் அத்தகைய பதிவைப் புதுப்பித்தல் என்பன அதிகாரசபையினால் ஆக்கப்பட்ட விதிகளுக்கிணங்க அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படுதலும் வேண்டும்.

## பாகம் IX

### *பிணக்குகளைத் தீர்த்துவைத்தல்*

*அதிகாரசபையினால் இணக்கம் அல்லது மத்தியஸ்தம் ஊடாகப் பிணக்குகள் தீர்த்துவைக்கப்படுதல்.*

**50.** திறத்தவர்கள் அவ்வாறு விரும்பினால், நிர்மாணக் கட்டுமான வேலைகளுக்கானவோர் ஒப்பந்தம் ஒன்று தொடர்பான ஏதேனும் பிணக்கு, ஒப்பந்தத்தில் ஏற்பாடு செய்யப்பட்டாலொழிய அதிகாரசபையினால் இணக்கத்தின் ஊடாக அல்லது மத்தியஸ்தத்தின் ஊடாகத் தீர்த்துவைக்கப்படலாம்.

*தீர்த்தளிப்புக்கென ஆற்றுப்படுத்துவதற்கான உரிமை.*

**51.** (1) அடையாளங்காணப்பட்ட நிர்மாண வேலை தொடர்பான ஏதேனும் ஒப்பந்தமொன்றுக்கான திறத்தவரொருவர், அதிகாரசபையினாலான இணக்கத்தின் மூலம் அல்லது மத்தியஸ்தத்தின்மூலம் ஏதேனும் பிணக்கைத் தீர்ப்பதற்கு முடியாதுவிடின், தீர்த்தளிப்புக்கென அத்தகைய பிணக்கை ஆற்றுப்படுத்தலாம்.

(2) இப்பிரிவின் கீழ் ஏதேனும் பிணக்கின் தீர்த்தளிப்புக்கான நடவடிக்கைமுறையானது விதித்துரைக்கப்பட்டவாறிருத்தல் வேண்டும்.

இப்பிரிவின் நோக்கத்திற்காக “பிணக்கு” என்பது, அடையாளம் காணப்பட்ட நிர்மாணக் கட்டுமான வேலையொன்றுக்கான திறத்தவர்களிடையேயான ஏதேனும் கருத்து வேறுபாட்டை உள்ளடக்குகின்றது.

*தீர்த்தளிப்பாளர்களின் இடாப்பு.*

**52.** (1) அதிகாரசபையானது, அதனால் ஆக்கப்பட்ட விதிகளின் மூலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான வடிவத்திலும் முறையிலும் நிர்மாண வேலைகளின் ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பிலான பிணக்குகளைத் தீர்த்தளிப்பதற்கு தகைமைபெற்ற தீர்த்தளிப்பாளர்களின் இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும். தீர்த்தளிப்பாளர்களின் இடாப்பானது அதிகாரசபையின் அலுவலகத்தில் கட்டணமின்றிப் பார்வையிடுவதற்குக் கிடைக்கக்கூடியதாகவிருத்தல் வேண்டும்.

(2) அத்தகைய தீர்த்தளிப்பாளர்களின் பதிவு செய்வதற்கான மற்றும் அத்தகைய பதிவைப் புதுப்பித்தலுக்கான நடவடிக்கைமுறை என்பன விதித்துரைக்கப்படக்கூடியவாறான நடவடிக்கைமுறைக்கிணங்கச் செய்யப்படுதல் வேண்டும்.

## பாகம் X

### மேன்முறையீட்டுச் சபை

மேன்முறையீட்டுச் சபையைத் தாபித்தல்

**53.** (1) ஏழு உறுப்பினர்களுக்கு மேற்படாதோரைக் கொண்டுள்ள மேன்முறையீட்டுச் சபையொன்று இச்சட்டத்தின் நோக்கத்திற்காகத் தாபிக்கப்படுதல் வேண்டும்; அவர்கள், அதிகாரசபையின் விதப்புரையின் மீது அமைச்சரினால் நியமிக்கப்படுதல் வேண்டும். மேன்முறையீட்டுச் சபையின் எல்லா உறுப்பினர்களும் நிர்மாணத் துறையில் இருபது ஆண்டுகளுக்குக் குறையாத உயர்தொழிற்சார் அனுபவத்துடன் இச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு தகைமைபெற்ற ஆட்களாக இருத்தல் வேண்டும்.

(2) அதிகாரசபையின் முடிபொன்றினால் பாதிக்கப்பட்ட எவரேனும் ஆள் விதித்துரைக்கப்படவேண்டியவாறான முறையில் மேன்முறையீட்டுச் சபைக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(3) மேன்முறையீட்டுச் சபையின் உறுப்பினர்கள், மூன்றாண்டுக் காலப்பகுதியொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன், மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடையோராகவிருத்தலும் வேண்டும்.

(4) ஐந்தாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், மேன்முறையீட்டுச் சபைக்கான உறுப்பினர்களின் நியமனத்திற்கு, ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) மேன்முறையீட்டுச் சபைக்குச் செயலாளரொருவர் இருத்தல் வேண்டும். அவர் அதன் உறுப்பினர்களிடையேயிருந்து மேன்முறையீட்டுச் சபையின் உறுப்பினர்களினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(6) மேன்முறையீட்டுச் சபையின் உறுப்பினர்களுக்கு, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் ஊதியமளிக்கப்படுதல் வேண்டும்.

(7) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக, மேன்முறையீட்டுச் சபையானது, அதன் கூட்டங்களிலும் மற்றும் அவற்றில் அலுவல்களைக் கொண்டுநடாத்துவதிலுமான அதன் சொந்த நடவடிக்கை முறையை ஒழுங்குபடுத்தலாம்.

மேன்முறையீடுகளை விசாரித்தலும் தீர்மானித்தலும்.

**54.** (1) மேன்முறையீட்டுச் சபைக்குச் செய்யப்பட்ட ஒவ்வொரு மேன்முறையீடும் -

(அ) விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் இருத்தலும் மற்றும் எம்முடிபுக்கெதிராக மேன்முறையீடு செய்யப்படுகின்றதோ அம்முடிபின் பிரதியொன்றுடன் சேர்த்தனுப்பப் படுதலும் வேண்டும் ;

(ஆ) மேன்முறையீட்டுக்கான ஏதுக்களைத் தெளிவாக எடுத்துக்காட்டுதல் வேண்டும் ; அத்துடன்

(இ) அதிகாரசபையினது முடிபின் தேதியிலிருந்து முப்பது நாட்களினுள் மேன்முறையீட்டுச் சபையின் செயலாளரிடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

(2) மேன்முறையீடொன்று மேன்முறையீட்டுச் சபையின் மூன்றுக்குக் குறையாத உறுப்பினர்களினால் விசாரிக்கப்படுதல் வேண்டும்.

(3) மேன்முறையீடொன்றைப் பெற்றதன்மேல், மேன்முறையீட்டுச் சபையின் செயலாளர், அத்தகைய மேன்முறையீட்டை விசாரிப்பதற்கான தேதியையும், நேரத்தையும் மற்றும் இடத்தையும் நிர்ணயித்தல் வேண்டுமென்பதுடன், மேன்முறையீட்டாளருக்கும் அதிகாரசபைக்கும் அதுபற்றிப் பதினான்கு நாட்கால அறிவித்தல் கொடுத்தலும் வேண்டும்.

(4) மேன்முறையீட்டாளர் ஒவ்வொருவரும், நேரடியாகவோ அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் மூலமாகவோ மேன்முறையீட்டுச் சபையின் முன்னர் தோன்றலாம்.

(5) மேன்முறையீடொன்றை விசாரித்ததன் பின்னர், மேன் முறையீட்டுச் சபையானது அதனால் அத்தகைய மேன்முறையீடு பெற்றுக்கொள்ளப்பட்ட தேதியிலிருந்து இரண்டு மாத காலப் பகுதியினுள் அதன் முடிபை வழங்குதல் வேண்டுமென்பதுடன், எம்முடிபுக்கெதிராக மேன்முறையீடு செய்யப்பட்டதோ அம்முடிபை உறுதிப்படுத்தலாம், வேறுபடுத்தலாம் அல்லது எதிர்மாறாக்கலாம்.

(6) மேன்முறையீட்டுச் சபையின் முடிபும் மற்றும் அதற்கான காரணங்களும் மேன்முறையீட்டாளருக்கும் அதிகாரசபைக்கும் எழுத்தில் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(7) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் மேன் முறையீடு தொடர்பில் மேன்முறையீட்டுச் சபையின் முடிவினால் இன்னலுற்றவரான எவரேனும் ஆள், முடிபும் அதற்கான காரணங்களும் மேன்முறையீட்டாளருக்கு அளிக்கப்பட்ட தேதி யிலிருந்து முப்பது நாட்களினுள் மேன்முறையீட்டு நீதிமன்றத் துக்கு அத்தகைய முடிபுக்கு எதிராக மேன்முறையீடு செய்யலாம்.

## பாகம் XI

## நிர்மாணத் தொழிலில் தகவல் சேகரித்தலும், அதனைச் செய்முறைப்படுத்துதலும், விநியோகித்தலும்

நிர்மாணத் தொழிலுக்கான தேசியத் தரவுத் தளமொன்றை அதிகாரசபை பேணுதல்.

**55.** (1) அதிகாரசபையானது நிர்மாணத் தொழிலில் தேசியத் தரவுத் தளமொன்றைப் பேணுவதற்கு பொறுப்புடையதாக இருத் தல் வேண்டும் ; (இதனகத்துப்பின்னர் “தகவற் செயலகம்” எனக் குறிப்பிடப்படும்) அதற்காக அர்ப்பணிக்கப்பட்ட தகவற் செயலக மொன்று அதிகாரசபையினுள் தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) தகவற் செயலகத்திடமிருந்து தேவைப்படுத்தப்பட்ட பணிகளும், நடவடிக்கைமுறைகளும், செயல்நிறைவேற்ற நியமங் களும் விதித்துரைக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும்.

(3) அதிகாரசபையானது, அறிவுறுத்துவதற்கும், பின்வருமாறு தகவலுக்காக வேண்டுகோள் விடுப்பதற்கும் தத்துவமுடையதாதல் வேண்டும் :-

(அ) அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஏதேனும் நிர்மாணத்துக்காக ஏதேனும் கருத்திட்டத்துக்கு அல்லது ஆளுக்கு ஆண்டுதோறும் வழங்கப்பட்ட மொத்த நிதிவசதிகள் தொடர்பில், எல்லா அரச மற்றும் தனியார் வங்கிகளிடமிருந்தும், ஆயின், அத்தகைய நிர்மாண வேலைகளில் சம்பந்தப்பட்ட கருத்திட்டங்களும் ஆட்களும் பற்றி வெளிவிடப்படுதலாகாது ;

(ஆ) 1979 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து நிர்மாணிக்கும் நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட கடன்களினதும் வழங்குகைகளினதும் எண்ணிக்கை தொடர்பில், ஆயின், கருத்திட்டங்கள் மற்றும் அத்தகைய கடன்களின் மற்றும் வழங்குகைகளின் பயன்பெறுநர்களின் பெயர்கள் வெளிவிடப்படுதலாகாது ;

(இ) இலங்கை சுங்கத் திணைக்களத்திடமிருந்து நிர்மாணப் பொருட்களினதும் எல்லா இறக்குமதிகளினதும் மற்றும் ஏற்றுமதிகளினதும் தொகைகளும் பெறுமதிகளும் தொடர்பிலான தகவல் ;

(ஈ) 1992 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, சுரங்கங்கள், கனிப்பொருட்கள் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட புவியியற்சார் ஆய்வுகள் மற்றும் சுரங்கங்கள் பணியகத்திடமிருந்து, மணல் தோண்டுவதற்கான உரிமங்களை வைத்திருப்போரினால் சந்தைக்கு வழங்கப்பட்ட ஆற்று மணல் மற்றும் கடல்மணல் தொடர்பான புள்ளி விபரங்கள் ;

(உ) நிர்மாணக் கட்டுமான வேலைகளுக்காக ஒப்பந்தஞ் செய்வதில் அல்லது அவற்றின் நேரடி நிர்மாணிப்பில் ஈடுபடுகின்ற எல்லா அரசாங்க மற்றும் பகுதியளவிலான அரசாங்க முகவராண்மைகளிடமிருந்தும், குறித்துரைக்கப்பட்டவொரு படிவத்தில் அதிகாரசபையினால் தேவைப்படுத்தப்பட்டவாறாக ஏதேனும் நிர்மாணக் கட்டுமான வேலை பற்றிய விபரங்கள் ;

(ஊ) எல்லாத் தகைமைபெற்ற ஆட்களிடமிருந்தும், பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்தும் மற்றும் ஆதன அபிவிருத்தியாளர்களிடமிருந்தும், பூர்த்தி செய்யப்பட்ட ஏதேனும் நிர்மாணக் கட்டுமான வேலை தொடர்பான விபரங்கள் ;

(எ) நிர்மாணத் தொழில் தொடர்பான அத்தகைய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் வாழ்க்கைத் தொழிற்சார் பயிற்சிப் பணிப்பாளர் தலைமை அதிபதியிடமிருந்து நிர்மாணத் தொழில் தொடர்பான அத்தகைய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் விளைவுகள் தொடர்பிலான விபரங்கள் ;

(ஏ) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வீடமைப்புக் கடன்களையும் வழங்கல்களையும் வழங்குகின்ற எல்லா அரசாங்க, கூட்டுறவு மற்றும் வலிந்துதவும் ஒழுங்கமைப்புகளிடமிருந்தும் வழங்கப்பட்ட அத்தகைய வீடமைப்பு கடன்களினதும் வழங்கல்களினதும் எண்ணிக்கை மற்றும் தொகை தொடர்பில் ஆயின், அத்தகைய கடன்களின் அல்லது வழங்குகைகளின் பயன்பெறுநர்கள் பற்றி வெளிவிடுதலாகாது ; அத்துடன்

(ஐ) நிர்மாணக் கட்டுமான வேலைகளுக்காக அனுமதிப்பத்திரங்களையும் உரிமங்களையும் வழங்குகின்ற எல்லா உள்ளூர் அரசாங்க அதிகாரசபைகளிடமிருந்தும் மற்றும் எல்லா நியதிச்சட்டமுறையான குழுக்களிடமிருந்தும், அதிகாரசபையினால் ஆக்கப்பட்ட விதிகளின்மூலம் அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான நிர்மாணக் கட்டுமான வேலைகள் தொடர்பிலான எவையேனும் விபரங்கள்.

(4) ஓராம் உட்பிரிவின் நியதிகளின்படி தகவலுக்கான ஏதேனும் வேண்டுகோளுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனுமாள், வேறு ஏதேனும் சட்டத்தில் உள்ளடங்கியுள்ளது எது எப்படியிருப்பினும், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(5) அதிகாரசபையானது, நாட்டிலுள்ள நிர்மாணத் தொழில் பற்றிய ஆண்டறிக்கைகளை வெளியிடுவதற்கும், அதிகார சபைக்குச் செய்யப்பட்ட எழுத்திலான வேண்டுகோளின்மீது, அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களுக்கும் மற்றும் தனியாட்களுக்கும் தகவல் பரப்புவதற்கும் பொறுப்புடையதாதல் வேண்டும். அதிகாரசபையானது, இச்சேவையைப் புரிவதற்காக, அதனால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய கட்டணங்களை அறவிடுதல் வேண்டும்.

(6) அதிகாரசபையானது, எல்லா நேரங்களிலும், அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் நியதிகளின்படி, வெளிவிடுகை தேவைப்படுத்தப்பட்டால் தவிர, இப்பிரிவின்கீழ் அதற்குச் கிடைக்கக்கூடியதாக்கப்பட்ட தகவல், தொடர்பாக அந்தரங்கத் தன்மையைப் பேணுதல் வேண்டும் ; தனிப்பட்ட ஒப்பந்தக்காரர்களின், உற்பத்தியாளர்களின் அல்லது வழங்குநர்களின் ஆளடையாளத்துக்கு இட்டுச்செல்லும் ஏதேனும் தகவலையும் மற்றும் அவர்களின் தனிப்பட்ட நிதி நிலைமைகள் தொடர்பான தகவலையும் அது பகிரங்கப்படுத்தலோ அல்லது வேறேதேனும் அரசாங்க அல்லது தனிப்பட்ட நிறுவனத்துக்கு வழங்குதலோ ஆகாது.

## பாகம் XII

### பொதுவானவை

**56.** (1) (அ) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கு விதியை மீறுகின்ற அல்லது அதற்கிணங்கியொழுகுவதற்குத் தவறுகின்ற ; அல்லது — தவறுகள்.

(ஆ) அதிகாரசபையின் உறுப்பினர், அலுவலர் அல்லது சேவையாளர் ஒருவராக இருந்து கொண்டு, அவர் எந்த நோக்கங்களுக்காக இச்சட்டத்தினால் தகவலை வெளிவிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளாரோ அந்த நோக்கங்கள் தவிர்ந்த வேறு ஏதேனும் நோக்கத்திற்காக, இச்சட்டத்தின்கீழ் அவரது தத்துவங்களைப் பிரயோகிக்கையில் அல்லது கடமைகளைப் புரிகையில் அவரினால் பெறப்பட்ட ஏதேனும் தகவலை எவரேனுமாளுக்கு வெளிவிடுகின்ற,

எவரேனுமாள், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்ற எவரேனுமாள், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறையான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டு ஆண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழான தவறொன்று ஆட்கள் குழுவொன்றினால் புரியப்படுமிடத்து, அப்போது -

(அ) அவ்வாட்கள் குழுவானது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருப்பின், அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும், அலுவலரும் ; அல்லது

(ஆ) அவ்வாட்கள் குழுவானது ஒரு குழுமமாகவிருப்பின், அக்குழுமத்தின் ஒவ்வொரு பங்காளரும்,

இச்சட்டத்தின்கீழ் அத்தவறிற்குக் குற்றவாளியாதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும் அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒரு பணிப்பாளர் அல்லது அலுவலர் அத்தகைய குழுமத்தின் பங்காளரொருவர், அத்தகைய தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்கு உரிய எல்லா விழிப்புக்கவனத்தையும் அவர் பிரயோகித்தாரென நீதிமன்றத்தின் திருப்திக்கு எண்பிக்கப்படின், அத்தகைய தவறிற்குக் குற்றவாளியாகக் கருதப்படுதலாகாது.

**57.** (1) இச்சட்டத்தின்கீழ் எக்கருமங்களுக்காக விதிகள் ஆக்கப் படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றதோ அல்லது அதிகாரமளிக்கப்படுகின்றதோ அக்கருமங்கள் எல்லாம் தொடர்பில் அதிகாரசபையானது விதிகளை ஆக்கலாம். விதிகள்.

(2) அதிகாரசபையினால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு விதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**58.** (1) எக்கருமம் விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத் தினால் தேவைப்படுத்தப்படுகின்றதோ அக்கருமம் ஏதேனும் தொடர்பில் அல்லது எக்கருமம் தொடர்பில் இச்சட்டத்தினால் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படு கின்றதோ அல்லது அதிகாரமளிக்கப்படுகின்றதோ அக்கருமம் ஏதேனும் தொடர்பில் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். ஒழுங்குவிதிகள்.

(2) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அதன் வெளியீட்டுத் தேதியன்று அல்லது அத்தகைய ஒழுங்கு விதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான ஒரு பிந்திய தேதி யன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர், ஆறு மாதங் களுக்குள் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) அத்தகைய ஒழுங்குவிதிகள் அவ்வாறு ஒழிக்கப்பட்டுவிட்ட தாகக் கருதப்படும் தேதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**59.** (1) அதிகாரசபையானது, எழுத்தில் குறித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைவாக, இச்சட்டத்தினால் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியினால் அதற்களிக்கப்பட்ட தத்துவங்களுள் எவற் றையும் அதிகாரசபையின் எவரேனும் அலுவலருக்குக் கையளிக் கலாம். தத்துவங்களைக் கையளித்தல்.

(2) அத்தகைய ஏதேனும் கையளிப்பு எவ்வாறிருப்பினும், அதிகாரசபையானது, அவ்வாறு கையளிக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகிப்பதனைத் தொடரலாம்.

ஏதேனும் காணியினுள் அல்லது வளவுகளினுட் பிரவேசிப்பதற்கான தத்துவம்.

**60.** (1) அதிகாரசபை அல்லது அதிகாரசபையினால் பொதுவாக அல்லது விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட அதன் எவரேனும் அலுவலர் அடையாளம் காணப்பட்ட நிர்மாண வேலை ஒன்று தொடர்பில் எவரேனும் ஆளினால் செய்யப்பட்ட ஏதேனும் முறைப்பாட்டைப் பெற்றதன் மேல், நியாயமான காரணங்களும் சான்றுகளும், அவ்வாறு தேவைப்படுத்தப்பட்டால் அவருக்கு ஆவணச் சான்றுகளும் இருப்பின், நாளின் நியாயமான ஏதேனும் நேரத்தில், அடையாளம் காணப்பட்ட நிர்மாண வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற அல்லது ஏதேனும் அடையாளம் காணப்பட்ட நிர்மாண வேலை பூர்த்தி செய்யப்பட்ட ஏதேனும் வளவுகளினுள், அத்தகைய அடையாளங் காணப்பட்ட நிர்மாணம் தொடர்பான ஏதேனும் அளவையை, பரிசோதனையை அல்லது நுண்ணாய்வைச் செய்யும் நோக்கதிற்கென உட்புகுவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) அந்த அடையாளம் காணப்பட்ட நிர்மாண வேலையின் சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர், (1) ஆம் உட்பிரிவின் கீழ் அதிகாரசபையினாலான அத்தகைய அளவையை, பரிசோதனையை அல்லது நுண்ணாய்வை நடத்துவதற்கு நியாயமற்ற முறையில் மறுக்குமிடத்து, அதிகாரசபையானது, அத்தகைய காணியின் அல்லது வளவுகளினுட் பிரவேசிக்கும் நோக்கத்துக்காகத் தேடுதல் எழுத்தாணையொன்றை நீதிவான் நீதிமன்றமொன்றிலிருந்து பெறலாமென்பதுடன், அத்தகைய தேடுதல் எழுத்தாணையினால் அதிகாரசபைக்கு அளிக்கப்பட்ட எல்லாத் தத்துவங்களையும் அல்லது அவற்றுள் எவற்றையும் பிரயோகிக்கலாம்.

அதிகார சபையை எதிர்த்தல் அல்லது அதற்கு முட்டுக் கட்டையிடுதல் முதலியன.

**61.** (1) அறுபதாம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் காணிக்கு அல்லது வளவுகளுக்குப் பொறுப்பாகவுள்ள ஆளெவரும், அதிகாரசபையின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர் 60 ஆம் பிரிவின்கீழ் அவரது கடமைகளை அல்லது பணிகளைச் சட்டமுறையாகப் புரிவதில் மற்றும் நிறைவேற்றுவதில் அறிந்துகொண்டு அல்லது வேண்டுமென்று அவரை எதிர்த்தலோ அல்லது அவருக்கு முட்டுக்கட்டையிடுதலோ ஆகாது.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறிச் செயற்படுகின்ற எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

**62.** அதிகாரசபையின் எல்லா உறுப்பினர்களும், அலுவலர்களும், சேவையாளர்களும், (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துக்குட்படவும், அதன் நோக்கத்துக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

அதிகார சபையின் உறுப்பினர்களும், அலுவலர்களும், சேவையாளர்களும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

**63.** அதிகாரசபையானது (26 ஆம் அத்தியாயமான) இலஞ்சச் சட்டத்தின் கருத்துக்குட்பட்ட, அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

இலஞ்சச் சட்டத்தின் கருத்துக்குட்பட்ட, அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனம்.

**64.** (1) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அதிகாரசபையினால் அல்லது அதற்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அதிகாரசபையினால் உறப்பட்ட ஏதேனும் செலவு, அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்ட அல்லது அதனால் அறவிடப்பட்ட எவையேனும் செலவுதொகைகள், அதிகாரசபையின் நிதியத்திற்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் உறப்பட்ட செலவுகள்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அதிகாரசபையின் எவரேனும் உறுப்பினரினால், அலுவலரினால் அல்லது எவரேனும் சேவையாளரினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் அல்லது செய்யாமை தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அத்தகைய ஆளினால் அல்லது அவருக்கெதிராக கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அத்தகைய ஆளினால் உறப்பட்ட எவையேனும் செலவுகள், அத்தகைய செயல் அல்லது செய்யாமை நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்த்தால், அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அத்தகைய செலவுகள் அவரினால் அறவிடப்பட்டாலொழிய, அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**65.** (1) ஆயிரத்துத்தொளாயிரத்து ஐம்பத்தேழாம் ஆண்டின் 49 ஆம் இலக்க, அரச கைத்தொழிற் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட 1992, யூன் 10 ஆந் திகதிய 718/15 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியானது, வர்த்தமானியில்

நீக்கங்களும் பேணல்களும்.

வெளியிடப்பட்ட கட்டளை மூலம் அமைச்சர் குறித்துரைக்கின்றவாறான அத்தகைய திகதியிலிருந்து ஒழிக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) தத்தமது ஓய்வுபெறும் வயதுகளை எய்தியிராதவர்களான, (1) ஆம் உட்பிரிவின்கீழான கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட நாளுக்கு நேர்முற்போந்த நாளன்று, 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, அரச கைத்தொழிற் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட 1992, யூன் 10 ஆந் திகதிய 718/15 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியின் மூலம் தாபிக்கப்பட்ட நிர்மாணப்பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தின் எல்லா ஊழியர்களுக்கும், நியமிக்கப்பட்ட திகதியன்று, மேற்கூறப்பட்ட கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட நாளுக்கு நேர்முற்போந்த நாளன்று அவர்களுக்கு ஏற்புடையதாகும் தொழிலில் துய்க்கப்பட்ட நியதிகள் நிபந்தனைகளுக்கு அனுகூலம் குறைந்தனவாகவிராத நியதிகள் நிபந்தனைகளின் மேல் அதிகாரசபையில் தொழில் முனைவு செய்யப்படுதல் வேண்டும்.

(3) அதிகாரசபையின் சேவையிலிருந்து நீக்குவதற்கு விருப்பம் தெரிவிக்கின்ற (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஊழியர், அதிகாரசபையில் சேவையாற்றுவதற்குக் கிடைக்கக்கூடிய முனைவு அவருக்கு அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்களினுள் அவ்வாறு செய்யலாம். (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அத்தகைய எவரேனும் ஊழியர், முனைவை ஏற்றுக்கொள்ளாதிருப்பதற்கான தமது விருப்புத் தெரிவைப் பிரயோகித்தால், அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் அதன் சார்பில் நடைமுறைப்படுத்தப்படவேண்டிய தன்னிச்சையான ஓய்வூதியத் திட்டமொன்றின்கீழ் அவருக்கு நட்டஈடு செலுத்தப்படுதல் வேண்டும்.

(4) மேற்குறிப்பிட்ட கட்டளையின் அழிப்பு ஒழிக்கப்பட்டமை எவ்வாறிருப்பினும் ,-

(அ) நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தின் அசைவுள்ள, அசைவற்ற எல்லா ஆதனங்களும், (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட திகதியிலிருந்து அதிகாரசபைக் குரித்தாதல் வேண்டும் ;

(ஆ) நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தினால் அல்லது அதனுடன் செய்துகொள்ளப்பட்டவையும், (1) ஆம் உட்பிரிவின் ஆக்கப்பட்ட கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட திகதிக்கு நேர்முற்போந்த நாளன்று உள்ளவையுமான எல்லா ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும், அதிகாரசபையினால் அல்லது அதனுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களாகவும் உடன்படிக்கைகளாகவும் கருதப்படுதல் வேண்டும் ;

(இ) நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தினால் அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப்பட்டவையும், (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட திகதிக்கு நேர்முற்போந்த நாளன்று முடிவுறாதுள்ளவையுமான எல்லாத் துடர்ச்சிகளும், வழக்குகளும், வேறு சட்ட வழக்குநடவடிக்கைகளும், மேற்கூறப்பட்ட கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட திகதியிலிருந்து, விடயத்துக்கேற்ப, அதிகாரசபையினால் அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப்பட்ட துடர்ச்சிகளாகவும், வழக்குகளாகவும், வேறு வழக்கு நடவடிக்கைகளாகவும் கருதப்படுதல் வேண்டும் ;

(ஈ) மேற்சொல்லப்பட்ட கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட திகதிக்கு நேர்முற்போந்த நாளன்று உள்ளவையுமான நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தின் எல்லா உரிமைகளும், பொறுப்புக்களும் மற்றும் கடப்பாடுகளும், மேற்சொல்லப்பட்ட கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட திகதியிலிருந்து, அதிகாரசபையின் உரிமைகளாகவும், பொறுப்புக்களாகவும் மற்றும் கடப்பாடுகளாகவும் கருதப்படுதல் வேண்டும் ;

(உ) ஏதேனும் தகைமையுடைய நீதி மன்றத்தினால் நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்துக்குச் சாதகமாக அல்லது அதற்கெதிராக ஆக்கப்பட்டதும், மேற்கூறப்பட்ட கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட நாளன்று தொடர்ந்து, திருப்திசெய்யப்படாதுள்ளதுமான ஒவ்வொரு தீர்வையும், கட்டளையும் அல்லது தீர்ப்பும், அத்தகைய திகதியிலிருந்து, விடயத்துக்கேற்ப, அதிகாரசபைக்குச் சாதகமாக அல்லது அதற்கெதிராக ஆக்கப்பட்ட தீர்வையாக, கட்டளையாக அல்லது தீர்ப்பாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க வலுவுறுத்தவும்படலாம்.

(5) நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தின் ஏதேனும் ஆதனத்துடன் தொடர்புடைய எல்லாப் புத்தகங்களும், கணக்குகளும் மற்றும் ஆவணங்களும் அத்துடன் நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தின் வெளியீடுகள் மற்றும் இடாப்புகள் என்பனவும் நடைமுறையில் பயனுறுவதாக இருத்தல் வேண்டும் என்பதுடன், அதிகாரசபையின் வெளியீடுகள் மற்றும் இடாப்புகளாகக் கருதப்படுதலும் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**66.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பொருள் கோடல்.

**67.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி -

"நிர்மாண வேலை" என்பது, பின்வரும் எவையேனும் விபரணத்தினவான தொழிற்பாடுகள் என்று பொருளாகும் :-

(அ) (நிரந்தரமாகவோ அல்லது அவ்வாறன்றியோ) காணியின் பாகமாக அமைகின்ற அல்லது காணியின் பாகமாக அமைவதற்கான கட்டிடங்களின் அல்லது கட்டமைப்புகளின் நிர்மாணம், மாற்றம், திருத்தம், பேணுகை, விசாலிப்பு, இடித்தழிப்பு அல்லது இடித்துவீழ்த்துகை ;

(ஆ) காணியின் பாகமாக அமைகின்ற அல்லது காணியின் பாகமாக அமைவதற்கான எவையேனும் கட்டுமான வேலைகளின் நிர்மாணம், மாற்றம் , திருத்தம், பேணுகை, விசாலிப்பு, இடித்தழிப்பு, அல்லது இடித்துவீழ்த்துகை ; (மேற்போந்தவற்றுக்குப் பங்கமின்றி) சுவர்கள் ;

(இ) காணியின் பாகமாக அமைகின்ற பொருத்திகளை ஏதேனும் கட்டிடத்தில் அல்லது கட்டமைப்பில் நிறுவுதல் ; (மேற்போந்தவற்றுக்குப் பங்கமின்றி) சூடாக்கல், வெளிச்சமூட்டல், குளிரூட்டல், காற்றோட்டம், மின்சக்தி வழங்கல், வடிகாலமைப்பு, உடனலம், நீர்வழங்கல் அல்லது தீ தடுப்பு அல்லது பாதுகாப்பு அல்லது தொலைத்தொடர்பு முறைமைகள் உட்பட ;

(ஈ) நிர்மாணம், மாற்றம், திருத்தம், விசாலிப்பு அல்லது புனரமைப்பு நெறியின்போது நிறைவேற்றப்படுகின்ற அளவுக்கு, கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகளின் வெளிப்புற அல்லது உட்புறச் சுத்தப்படுத்துகை ;

(உ) அமைவிடத் துப்புரவாக்குகை, மண் அகற்றல், மண் அகழ்தல், சுரங்க வெளியிடுதலும் துளையிடுதலும், அத்திவாரங்களை இடுதல், சாரம் கட்டுதலை எழுப்புதல், பேணுதல் அல்லது இடித்துவீழ்த்துதல், அமைவிடப் புனரமைப்பு, நிலவடிவமைப்பு மற்றும் வீதி வழிகளையும் மற்றும் வேறு அணுகுகைக் கட்டுமான வேலைகளையும் வழங்குதல் உட்பட இப்பிரிவில் முன்னதாக விபரிக்கப்பட்டவாறான அத்தகைய தொழிற்பாடுகளின் உள்ளார்ந்த பாகமாக அமைகின்ற அல்லது அவற்றுக்கு முதனிலையாக உள்ள அல்லது அவற்றைப் பூர்த்தி செய்கின்றனவாக உள்ள தொழிற்பாடுகள் ;

(ஊ) ஏதேனும் கட்டிடத்தின் அல்லது கட்டமைப்பின் உட்புற அல்லது வெளிப்புற மேற்பரப்புகளுக்கு வர்ணந்தீட்டல் அல்லது அவற்றை அலங்கரித்தல் ;

“நிர்மாண ஒப்பந்தம்” என்பது, பின்வருவனவற்றுள் எதற்காகவும் ஆளொருவருடனான அல்லது உருவகமொன்றுடனான உடன்படிக்கை என்று பொருளாகும் :-

(அ) நிர்மாண வேலையை நிறைவேற்றுதல் ;

(ஆ) கீழொப்பந்தத்தின் கீழ் அல்லது வேறு வகையாக, விடயத்துக்கேற்ப, அத்தகைய ஆளுக்கு அல்லது உருவகத்துக்கு வேறு ஆட்களால் நிர்மாண வேலை நிறைவேற்றப்படுவதற்காக ஒழுங்கேற்பாடு செய்தல்;

(இ) நிர்மாண வேலையை நிறைவேற்றுவதற்காகத் தனது சொந்தத் தொழிலாளர்களை அல்லது உருவாகத்தினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட தொழிலாளர்களை அல்லது வேறு ஆட்களின் தொழிலாளர்களை வழங்குதல் ;

"ஒப்பந்தக்காரர்" என்பது, ஒரு நிர்மாண ஒப்பந்தத்தின்கீழ் நிர்மாண வேலைகளை நிறைவேற்றுகின்ற எவரேனுமாள் அல்லது ஏதேனும் உருவகம் என்று பொருளாகும் ;

"நிர்மாணிப்பவர்" என்பது, புறநீங்கலாகவாயினுஞ்சரி அல்லது வேறேதேனும் தொழிலுடன் இணைந்தாயினுஞ்சரி, தனக்காகவோ அல்லது இன்னோராளுக்காகவோ அல்லது அவர் சார்பிலோ ஏதேனும் நிர்மாண வேலையை நிறைவேற்றுவதற்குப் பொறுப்பேற்கின்ற எவரேனுமாள் என்று பொருளாகும் ;

"ஆலோசகர்" என்பது, நிர்மாண வேலைக்கான ஓர் உடன்படிக் கையின் கீழ் ஆலோசனைச் சேவைகளை வழங்குகின்ற தகைமைபெற்ற எவரேனுமாள் அல்லது ஏதேனும் உருவகம் என்று பொருளாகும் ;

"ஆவணப்படுத்துகை" என்பது, கணியப் பட்டியல்கள், ஒப்பந் ஆவணங்கள், வரைபடங்கள் மற்றும் அளவுக் குறிப்பீடுகள், கேள்விப்பத்திரங்கள் அல்லது ஒப்பந்தங்கள் பற்றிய ஏதேனும் ஆவணம் என்பன உட்பட, கேள்விப்பத்திர மற்றும் விலைகூறல் ஆவணங்களைத் தயாரித்தல் என்று பொருளாகும் ;

"வெளிநாட்டிலிருந்து நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்கள்" என்பது, ஏதேனும் நன்கொடையளிக்கின்ற முகவராண் மையினால் அல்லது கடன் கொடுக்கும் முகவராண்மை யினால் அல்லது ஏதேனும் வெளிநாட்டு அரசாங்கத் தினால் பொதுத் திறைசேரியின் வெளிநாட்டு மூலவளத் திணைக்களத்தினூடாக நிதியளிக்கப்படுகின்ற ஏதேனும் கருத்திட்டத்தை உள்ளடக்குதல் வேண்டும் ;

"அடையாளம் காணப்பட்ட நிர்மாண வேலைகள்" என்பது, பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும் :-

(அ) பத்து மில்லியன் ரூபா பெறுமதியை விஞ்சுகின்றவையும் அல்லது காலத்துக்குக்காலம் அமைச்சரினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய உயரிய பெறுமதியை விஞ்சுகின்றவையும், பொதுமக்களினால் பயன்படுத்தப்படுவதற்கான வசதிகளையும் மற்றும் பொதுவாழ் வசதிகளையும் உள்ளடக்கிய எல்லாக் கட்டிடங்களும் மற்றும் கட்டமைப்புகளும் அல்லது ஏதேனும் கட்டிடம் அல்லது கட்டமைப்பு அல்லது நில வடிவமைப்பு ; அத்துடன்

(ஆ) சூழல், புவியியல் மற்றும் கலாசார மரபுரிமை ஒழுங்குபடுத்தற் குழுக்களின் அங்கீகாரத்தைத் தேவைப்படுத்துகின்ற எல்லாக் கட்டிடங்களும், கட்டமைப்புகளும் அல்லது நில வடிவமைப்புகளும் ;

"பூர்த்திசெய்யப்பட்ட நிர்மாணக் கட்டுமான வேலைகள்" என்பது, எந்த அடையாளம் காணப்பட்ட நிர்மாணக் கட்டுமான வேலையொன்றுக்குப் பூர்த்திசெய்தல் சான்றிதழொன்று அல்லது கையேற்றல் சான்றிதழொன்று வழங்கப்பட்டிருக்கின்றதோ அல்லது பயன்பாட்டிலுள்ளதோ அந்த அடையாளம் காணப்பட்ட நிர்மாணக் கட்டுமான வேலை என்று பொருளாகும் ;

"அமைச்சர்" என்பது, நிர்மாணம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் எனப் பொருளாகும் ;

"ஆதன அபிவிருத்தியாளர்" என்பது, காணிகள், காணிச் சொத்தாண்மை, நிதியளித்தல், சந்தைப்படுத்தல் என்பவற்றின் உள்ளீடுகளின் ஈட்டுகையினால் அல்லது வேறேதேனும் தேவைப்பட்ட நிபுணத்துவத்தினால் ஒன்றில் இயற்பொருள் ரீதியில் அல்லது கருத்துரு வகையில் அபிவிருத்தி செய்யப்பட்ட, விசேடமாக வீடமைப்புத் துறையில், நிர்மாணக் கைத்தொழிலிலான ஏதேனும் கருத்திட்டத்தை மேம்படுத்துகின்ற தொழிற்றுறை உரிமையாளர் ஒருவர் என்று பொருளாகும் ;

"தகைமைபெற்ற ஆள்" என்பது, தேவைப்படுத்தப்பட்ட ஒப்பந்த ஆவணங்களை வடிவமைத்தலையும், தயாரித்தலையும் நிறைவேற்றுவதிலும் மற்றும் ஏதேனும் அடையாளம் காணப்பட்ட வேலைகளின் மேற்பார்வையை நிறைவேற்று வதிலும் தகைமையுடையவரும், தகைமையுடைய ஆட்களின் இடாப்பில் அவருடைய பெயர் உள்ளடக்கப்பட் டுள்ளவருமான ஆள் ஒருவர் என்று பொருளாகும் ;

"மேற்பார்வை" என்பது, வடிவமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள பொறியியல் மற்றும் கட்டிடக்கலைக் கோட்பாடுகளும் தீர்மானங்களும் ஏதேனும் நிர்மாண வேலையில் தகுந்த முறையில் பின்பற்றப்படுகின்றனவென்பதை உறுதிப் படுத்துதல் என்று பொருளாகும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா *1,387* : (வெளிநாடு) ரூபா *1,849* : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. *163*, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்